# இணுவில் ஒலி

## இரு திங்கள் ஏடு

4



உலகப் பெருமஞ்சம்











பங்குனி - சித்திரை 2013


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலை ரூபா 50/=

# உடல் வளர்ச்சிக்கு

# ஜீவாகாரம்

## சிறியோர் முதல் பெரியோர் வரை பாவிக்க உகந்த சத்துணவு




Manufactured By:

**ANNA INDUSTRY, INUVIL**

T.P: 021 2223565

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22 MAR 2013

"பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவ வானிலும் நனி சிறந்தனவே"

# 'இணுவில் ஒலி'

(தாயக மண்ணின் தனித்துவம் காக்கும் இருதிங்கள் ஏடு)

வள்ளுவர் ஆண்டு 2044 பங்குனி-சித்திரை 2013 வில் - 1 ஒலி - 4

**நிறுவுனர்/காப்பாளர்**
நடராசா சச்சிதானந்தன்

**ஆசிரியர்:**
த.சிவசுப்பிரமணியம் ( தம்பு சிவா )
தொ.பேசி : 071 8676482

**நிர்வாக ஆசிரியர்:**
சிவலிங்கம் சரவணபவன்
தொ.பேசி: 077 3126802

**சஞ்சிகைக் குழு :**
மூ.சிவலிங்கம்
கா.வைத்தீஸ்வரன்
பேராசிரியர் க.தேவராஜா
க.பரமேஸ்வரன்
சு.சண்முககுமார்
மா.ந.பரமேஸ்வரன்
சு.பரமேஸ்வரலிங்கம்
திருமதி வை.கணேசபிள்ளை
க.கண்ணபிரான்
திருமதி க.கிருஸ்ணபிள்ளை
அ.குகதாசன்
ம.காண்டீபன்
சொ.ஹரிசங்கர்
தே.சதீசன்
பி.அஜந்தன்
யோ.சுதந்திரன்

**வெளிநாட்டுப் பிரதிநிதிகள்:**
இலண்டன் : சபேசன் சண்முகநாதன்
அவுஸ்திரேலியா : தி.திருநந்தகுமார்
கனடா : ம.இராஜகுலசூரியர்
ஜேர்மனி : ஆ.வடிவேற்கரசன்
டென்மார்க் : கணேசு பரமநாதன்
சுவிஸ் : நடராஜா மனோகரன்
நோர்வே : நல்லையா சண்முகப்பிரபு
அமெரிக்கா : வே.பிரேமதயாளன்

**தொடர்பு :**
9 -2/1, நெல்சன் இடம்,
கொழும்பு - 06, இலங்கை.
தொ.பேசி : 0114902406

47, கருணாகரப்பிள்ளையார் கோவில் வீதி,
இளந்தாரி கோவிலடி, இணுவில் கிழக்கு,
சுன்னாகம், இலங்கை.

**E-Mail : inuviloli@hotmail.com**

படைப்புகளுக்குப் படைப்பாளிகளே பொறுப்புடையவர்கள்.
ஆக்கங்கள் செம்மை பார்த்தபின் பிரசுரமாகும்.
-ஆசிரியர்-

## உள்ளே ஒலிப்பவை

| | பக்கம் |
|---|---|
| பேனா முனையிலிருந்து..... | 02 |
| நிறுவனரிடமிருந்து | 03 |
| வாழ்த்துக்கள்..... | 09 |
| **கட்டுரை :** | |
| ● இணுவில் பெரிய சந்நியாசியார் | 04 |
| ● நூற்றாண்டு வரலாறு கண்ட இராமநாதன் கல்லூரி | 21 |
| ● இரா.சுந்தரலிங்கம் என்னும் கல்வியாளர் | 24 |
| ● சங்க இலக்கியங்கள் சுட்டும் தந்தி வாத்தியங்களள் | 26 |
| ● பாடசாலை பயிற்சிக் களமாதல் வேண்டும் | 37 |
| **பண்பாட்டுப் பாரம்பரியம்:** | |
| ● முருகேசு அப்பாக்குட்டி | 10 |
| **சிறுகதை:** | |
| ● வாழவைத்த தெய்வம் | 16 |
| **கவிதை:** | |
| ● என் இணுவிலாள்! | 03 |
| **மாணவர் உலகம்:** | |
| ● சோதனைகளை சாதனையாக்குவோம் | 31 |
| ● தகவல் தொடர்பாடல் | 32 |
| ● வளர்ந்துவரும் சமுதாயத்தின் பங்களிப்பு | 33 |
| ● பனைமரம் (கவிதை) | 34 |
| **உங்கள் விருந்து:** | 35 |
| **ஏனையவை:** | |
| ● அரசு வழங்கிய கலாபூஷணம் விருது | 29 |
| ● அறிந்தவையும் தெரிந்தவையும் | 30 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேனா முனையிலிருந்து .....

பெரியோர்களை மதிக்கும் பண்பாடு முற்றாகப் புறந்தள்ளப்பட்டு, அவர்களைப் பெரும் சுமையாக எண்ணி ஒதுக்கும் செயற்பாடு மேலோங்கி நிற்கிறது. இது இன்றைய தமிழர் சமுதாயத்தின் சாபக்கேடு என்றே சொல்லவேண்டும். பெற்று வளர்க்கப் படாத பாடுபட்டு, கல்வி புகட்டி தங்களை நல்ல நிலைக்கு உருவாக்கிவிட்டவர்களை உதாசீனம் செய்யும் பிள்ளைகளைக் காணும் போது 'என்ன உலகமடா' என்று எண்ணத் தோன்றுகிறது.

திருமணம் செய்த பின் தம்பதியினர் தங்கள் தனிப்பட்ட சுகவாழ்வுக்குத் தம் பெற்றோர்கள் இடைஞ்சலாக இருப்பதாகவே எண்ணுகிறார்கள். ஆண்பிள்ளைகள் பெண் தாசகர்களாக மாறி தம் பெற்றோர்களை ஒதுக்குகின்றார்கள். பெண் பிள்ளைகளோ தமது பெற்றோர்களை "பட்டிக்காடுகள் உங்கட பாட்டிலை பேசாமல் கிடவுங்கோ" என்று வசைபாடுகிறார்கள்.

*"நெஞ்சு பொறுக்குதிலையே - இந்த*
*நிலைகெட்ட மனிதரை நினைத்துவிட்டால்"*

மனித சமுதாயம் எவ்வளவோ முன்னேற்றம் கண்டு வளர்ந்துவிட்டபோதிலும் நல் மனங்களைக் கொண்ட மனிதர்களைக் காணமுடியவில்லையே என்ற ஆதங்கம் பலர் மனங்களில் தோன்றாமல் இல்லை.

"பெரிசுகள், கிழடுகள் உங்களுக்கு என்ன தெரியும்?" என்று கேட்கின்ற நிலையில்தான் இன்றைய இளவட்டங்களின் நகைப்பு. ஏளனம் செய்தல் சர்வசாதாரண நிகழ்ச்சியாகிவிட்டது.

'காவோலை விழ குருத்தோலை சிரித்ததாம்'

– என்ற பழமொழி எங்கள் பிரதேசத்தில் பேசப்பட்டு வருவதை அவதானிக்கும்போது... என்றோ ஒருநாள் குருத்தோலையும் காவோலையாகும் என்பதை அவர்கள் நினைத்துப் பார்க்க வேண்டும்.

பொருள், பண்டங்கள் உள்ள பெற்றோரிடம் உள்ளவற்றைப் பறித்துக்கொண்டு அவர்களை வீட்டை விட்டுத் துரத்திவிட்ட பிள்ளைகளின் கைங்கரியங்களும் அரங்கேறி வருகின்றன. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவர் வெள்ளவத்தையில் பிச்சையெடுத்துக் கொண்டிருந்தபோது.... 'எப்படி இருந்தவர் இப்படியாகிவிட்டாரே!' என்று என்மனம் உண்மையிலேயே வேதனைப்பட்டது.

முதியவர்களை வயோதிபர் இல்லங்களில், அனாதை இல்லங்களில் ஒப்படைக்கும் கலாசாரம் வளர்ந்துவருவதை இன்று அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. பிள்ளைகளால் கவனிக்கப்படாமல் ஒதுக்கப்பட்ட எத்தனையோ பெற்றோர்கள் அனாதை இல்லங்களில் அல்லலுற்றுக்கொண்டிருக்கின்றார்கள். நோய் காரணமாகவும் முதிர்ச்சி காரணமாகவும் ஆறுதலற்ற நிலை அவர்களை வாட்டிக்கொண்டிக்கின்றது. உடல் ரீதியாகவும் உளரீதியாகவும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இதனால் பலர் மனநோயாளிகளாக மாறிக்கொண்டிருக்கின்றார்கள்.

வெளிநாடுகளில் உள்ளவர்கள் தமது வயோதிபப் பெற்றோர்களை வயோதிபர் இல்லங்களில் தங்கவைத்து அவர்களின் பராமரிப்புச் செலவுகளையும் வழங்கிக் கொண்டிருக்கினறார்கள். அவர்களுக்கு எல்லா வசதிகளும் செய்து கொடுத்துள்ளபோதிலும் அவர்களின் மனங்களில் மகிழ்ச்சியில்லை. தங்கள் பிள்ளைகள் தங்களை வந்து பார்க்கமாட்டார்களா? என்ற ஏக்கத்துடன் பிள்ளைகளின் வரவை எதிர்பார்த்து ஏமாந்து நிற்கின்றார்கள் அவர்கள்.

ஆகவே பொதுவாக நோக்குமிடத்து இன்றைய காலகட்டத்தில் வாழுகின்ற வயோதிபர்களின் நிலை பரிதாபத்துக்குரியதாகவே அமைந்துள்ளது. தமது பெற்றோர்களை, முதியவர்களை தமது சொத்து என்று சமுதாயம் எண்ணாதவரை அவர்களின் விடிவை எதிர்பார்க்க முடியாது.

"என்று தணியும் இந்த முதியோரின் தாகம்?"

மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம். - **ஆசிரியர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிறுவுநரிடமிருந்து....

"இணுவில் ஒலி" ஒரு சமூக நலன் பேணும் இதழ். அதற்கமைந்த விடயதானங்களைத் தாங்கி வெளிவரவேண்டும் என்பதே எமது நோக்கமாகும்.

எமது இணுவில் கிராமத்தின் பாரம்பரியமான கல்வி, சமயம், மொழி, இலக்கியம், கலை, கலாசாரம், சம்பிரதாயம், தொழில் போன்றவற்றின் ஒளியாகப் பிரகாசிக்க வேண்டுமென்பதே எமது இலக்காகும்.

இந்த இலக்கை அடைவதற்கு இணுவில் மக்களாகிய நாங்கள் ஒவ்வொருவரும்தான் பொறுப்பாளிகள். இதை மனதில் வைத்து "எனது பங்களிப்பு என்ன?" என்று மனங்களைத் தட்டிக் கேட்டு "இணுவில் ஒலி"யின் மலர்ச்சிக்கு உதவுங்கள்.

எப்படி உதவலாம் என்று சிந்திக்கிறீர்களா? நல்லது, நமது சில யோசனைகள். சிந்தித்து முன்வாருங்கள்.

இணுவிலுக்கு மகிமைதரும் விடயங்கள்... காலத்தால் மறைந்தவையும், மறந்தவைகளும், மாற்றமடைந்தவையும் "இணுவில் ஒலி"க்கு நல்விருந்தாகும். இவற்றைத் தேடிக் கண்டுபிடித்து எழுத்து வடிவத்தில் எமக்கு அனுப்புங்கள். எமது இணுவில் கிராமத்தின் பெருமை எங்கும், எப்போதும் ஒலிக்கட்டும்.

**- நடராசா சச்சிதானந்தன்**

# என்! இணுவிலாள்......!

**என் இணுவை, மண்பரப்பே!**
**உன்மடியில் கண்ட சுகம்**
**இன்னும் என் நெஞ்சில்**
**இனிக்கிறதே! இனிக்கிறதே!**
**வான் நீந்தி முத்தமிடும்**
**வண்ணநிலா பாய் விரிப்பில்**
**ஊன் காய்ந்து மெய் சோர**
**உழைத்து உண்ட அந்த சுகம்**
**இன்றும் என் நெஞ்சில்**
**இருக்கிறதே! இனிக்கிறதே!**

**மண் தாண்டிப் புறம் சென்றோம்**
**மாற்றான் மடிக் கிடந்தோம்**
**விண்தாண்டி மேல் சென்றோம்**
**விடிவெள்ளி பல தொட்டோம்**
**வண்ணக் கனவுலகில்**
**வாழ்ந்தோம், பொருள் துலைத்து,**
**கண் காணா தூரத்தே - நாம்**
**கண்ட சுகம் அத்தனையும்**
**பொய்யென்போம்! மெய்யில்லை**
**போற்றுகின்றோம், உன் சிறப்பை!**

*லண்டன்* - 29-01-2013

**- கணபதி சர்வானந்தா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகப் பெருமைமிக்க கலைப் பொக்கிஷத்தை உருவாக்கித் தந்த இணுவில் பெரிய சந்நியாசியார்

-கலாபூஷணம் மூ.சிவலிங்கம்

இணுவில் கிழக்கில் அரசோலைப் பிள்ளையார் என வழங்கப்பெறும் பழமை வாய்ந்த கப்பனைப் பிள்ளையார் கோயில் சூழலில் வாழ்ந்த கந்தர் - தெய்வானை தம்பதியினரின் இரண்டாவது மகனாக 1860 இல் பிறந்தவர் சுப்பிரமணியம் என்னும் தவசீலர்.

விவசாயிகளான பெற்றோரால் வளர்க்கப்பட்டு வந்த ஆநிரைகளைத் தமது பதினெட்டாவது வயதிலிருந்து மேய்க்கும் பணியினை எற்றார். தினமும் அதிகாலையில் எழுந்து காலைக் கடன்களை நிறைவு செய்ததும் ஆலய தரிசனம் காண்பார். பின் தாயார் கொடுக்கும் காலை உணவை உண்பார். குடும்ப ஆநிரைகளைப் பட்டியிலிருந்து அழைத்துச் சென்று காரைக்கால் புல்வெளிகளில் மேயவிடுவார். காரைக்கால் சிவன் ஆலயத்தில் தரிசனத்தை மேற்கொண்டபின் ஓய்வெடுப்பார். கால்நடைகளையும் கண்காணித்துக்கொண்டு இருப்பார். தினமும் தாயார் மதிய உணவைப் பனை ஓலைப் பெட்டியில் வைத்து மூடிக் கொண்டு வந்து கொடுப்பது வழக்கம்.

ஒருநாள் காரைக்காலில் குடி கொண்டிருந்து அருள்பாலிக்கும் மாரியம்பாள் தனது திருவிளையாடலுக்காக, தெய்வானை உணவு சமைப்பதில் தாமதத்தை ஏற்படுத்தினார். மதிய உணவு வரப்பிந்தியதும் பசியால் வாடிய சுப்பிரமணியம் மாரியம்பாளின் சந்நிதிச் சூழலில் நின்று "மாரியம்பாளே நீதான் தஞ்சம்" எனக்கூறி படுத்து உறங்கிவிட்டார். தன்பிள்ளையின் பசியைத் தீர்க்கத் திருவுளம் கொண்ட மாரியம்பாள், சுப்பிரமணியத்தின் தாயார் போல் வந்து அவரைத் துயிலெழுப்பி பனை



யோலை மூடல் பெட்டியினுள் வைத்திருந்த திருவமுதை வழங்கிப் பசியாற்றினார்.

சிறிது நேரத்தின் பின் ஓடோடி வந்த தெய்வானை வழமைபோல் உணவைக் கொடுக்க, திருவமுதின் சிறப்பு வெளிப்பட்டது. தாயாரிடமும் " சற்று முன்தானே மதிய உணவைக் கொண்டு வந்து தந்தீர்கள்" என்று சுப்பிரமணியம் கூறினார். மாரியம்பாளின் திருவமுது ஞானத்தை உணர்த்தியது. ஆடினார், பாடினார், ஓடினார், மாரியம்பாளைப் போற்றி வழிபட்டார். தாயாரும் அன்னையை வழிபட்டு, தன் மகனுக்குக் கிடைத்த தெய்வீக அருளை வியந்த வண்ணம் எல்லோருக்கும் அந்த நற்செய்தியைச் சொல்வதற்காக தமது இல்லமேகினார். அன்னை சக்தியின் பேரருளால் சுப்பிரமணியம் முக்காலும் உணர்ந்த பெருஞ்சித்தரானார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சித்தரான பெரிய சந்நியாசியாரின் பணிகள்

சந்நியாசிக் கோலம் பூண்டு நின்ற சுப்பிரமணியம் இறைபணியுடன் அறப்பணியையும் மேற்கொண்டார். தம்மை நாடி வருவோருக்குத் திருநீறிட்டு, மணி மந்திரம் ஓதித் திருவாக்குச் சொல்லி வந்தார். சித்த மருத்துவத்தில் எதுவித தேர்ச்சியில்லாத போதும் சித்து மகிமையால் மூலிகைப் பொருட்களுடன் வைத்தியமும் செய்து மக்களின் உடல், உளப் பிணிகளை நீக்கினார். அதனால் அவரை எல்லோரும் பெரிய சந்நாசியார் என்று அன்புடனும் பய பக்தியுடனும் அழைக்கலாயினர். பெரியார் மகிமை திக்கெட்டும் பரவியது. உடல் நோய்கள், மனநோய்கள் ஆகியவற்றால் பீடிக்கப்பட்டோர் இவரிடம் வந்துவிட்டால் அங்குள்ள வைரவர் சந்நிதி முன்பாக அவர்களை அமரச் செய்து குணப்படுத்துவார். பில்லிசூனியம், பேய்பிசாசு நம்பிக்கை கூடியிருந்த அக்காலப் பகுதியில் பீடிக்கப்பட்டோரை கிழக்கேயுள்ள உருத்திர பூமியாகிய காரைக்கால் மயானத்தில் கழித்து அகற்றிவிடுவார். நம்பிக்கை உள்ளவர்களுக்கு அது பலனைக் கொடுத்தது. இப்பெரியாரின் தெய்வீகச் சக்தியால் உடல் உள நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள் குணமடைந்தனர். அவரின் தெய்வீக சாதுரியத்தையும், நோய்களைக் குணப்படுத்தும் ஆற்றலையும் கண்டு கேட்டு அறிந்து கவரப்பட்ட பலர் தொடர்ந்து வந்து அவரிடத்தில் கூடுவர். பெரியாரும் தம்மை நாடி வருவோரை அரவணைத்து ஆதரவு தந்து எதிர்காலப் பலன்களையும் அவர்களுக்குச் சொல்லுவார். இதன் காரணமாக எந்நேரமும் பெருந்தொகையானவர்கள் அவரைச் சூழ்ந்து காணப்படுவர். இறையுணர்வு பெற்ற பெரிய சந்நியாசியார் தமது அடியார்களின் உதவியுடன் ஆலயச் சூழலிலும் காரைக்கால் மயானத்திலும் மூலிகை மரங்கள், கனிதரு மரங்கள், நிழல்தரும் மரங்கள் எனப் பல வகையிலும் பயன்தரும் 1008 நன்மரங்களை நாட்டினார். கோடையில் இவற்றைப் பராமரிக்க வேண்டிய நீரைப் பெறவும், கால் நடைகள் நீரைப் பருகவும் வேண்டி இரு கிணறுகள் உட்பட ஆலய வீதிகளில் ஏழு நீர் நிலைகளைத் தோண்டிவித்தார். இறையருளும், சித்தரின் மகிமையும், அடியார்களின் சிரமதானப் பணியும் ஒருங்கமைய குறுகிய காலத்தில் காரைக்கால்பதி பசுமையான சோலை வனமாகியது.

### ஆலய அபிவிருத்தி

பெரியாரின் சிந்தனையில் உருவான இறைபணி சிவாலய அபிவிருத்தியை நாடியது. சிவனாரின் சந்நிதியை அழகுற அமைப்பதற்காக சுற்றுச் சூழலிலுள்ள செடி கொடிகளை வெட்டித் துப்புரவு செய்து அகற்றினார்கள் அவரது அடியார்கள். மேலும் அங்கு காணப்பட்ட புற்றுக்களையும் அகற்றும் பணியில் புற்றை வெட்டும்போது நெடிய பாம்புகள் வெளிவந்து யாவரையும் துரத்தின. விசுவநாதப் பெருமானின் ஆலயத்தின் அருகில் குடிகொண்டிருந்த பாம்புகள் தம்மை அங்கு செல்ல விடாது துரத்தியதை அடியார்கள் பெரிய சந்நியாசியாரிடம் தெரிவித்தார்கள். அவர் இறைவனை நினைந்து வேண்டியதால், இருவார காலத்தின் பின் ஆலயப் பணியை மீண்டும் தொடர இறையருள் உணர்த்தியது. பெரியாரின் திருவாக்கை யாவரும் ஏற்று மீண்டும் பணியை ஆரம்பித்தனர். அங்கு குடிகொண்டிருந்த பாம்புகள் தாமாகவே அவ் விடத்தைவிட்டு அன்றைய தினம் வெளி யேறிவிட்டன. அவை விசுநாதப் பெருமானின் பாதுகாவலர்களோ என்று அடியார்கள் ஆச்சரியப்பட்டார்கள்.

தொடர்ந்து திருத்தலத்தின் உள்ளும் புறமும் செம்மைப்படுத்தப்பட்டு முடிந்ததும் அதைத் தொடர்ந்து பெரியாருக்குத் திருவமுது கொடுத்த மாரியம்பாள் சந்நிதியும், திருநீறிட்டு அருள்வாக்குச் சொல்ல வைக்கும் ஞான வைரவரின் சந்நிதியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அடங்கலாக சிவாலயத்தின் எல்லாப் பகுதிகளும் சிறப்பான முறையில் சீராக் கப்பட்டன. இப்புனிதமான காரைக்கால் திருப்பதியில் யாவரும் வந்து மன நிறை வுடன் தரிசனம் மேற்கொள்ளலாயினர். பெரிய சந்நியாசியாரின் ஆலயப் பணியில் எல்லோரும் மனநிறைவு கண்டனர்.

**இணுவைக் கந்தப் பெருமானின் ஆலயப் பணி**

காரைக்கால் சிவன்கோவிலின் புன ருத்தாரணப் பணியுடன் பெரிய சந்நி யாசியார் தமது மூதாதையரின் உரிமை யான இணுவில் கந்தப் பெருமானின் ஆலயப் பணியையும் உள்ளன்போடு செய்து வந்தார். ஒரு புண்ணிய காலத்து சுபதின இரவு பெரியார் முருகப் பெருமா னைத் தியானித்த வண்ணம் உறங்கி விட்டார். பெரியாரின் கனவில் தோன் றிய முருகப் பெருமான் தாம் உல்லாச மாக வீதி உலா வருவதற்கு பெருமஞ் சம் ஒன்றை அமைக்குமாறு கூறி அதன் மாதிரி உருவமைப்பையும் காண்பித்து மறைந்தருளினார். காலையில் எழுந்த பெரியார் கனவில் கண்ட திருமஞ்சத் தின் அமைப்பை மனதில் ஆழப் பதித்தவ ராய் அதனை உருவாக்கச் சித்தம் கொண் டார்.

**திருமஞ்சம் உருவாக்கம்**

வழமையாகப் பொழுது புலர்ந்ததும் அன்று காலை தமது அன்றாட கடமை களை முடித்துக்கொண்டு ஆலய தரி சனம் செய்தார். பின்பு காரைக்கால்பதியை அடைந்தார். வழமை போலத் தம்மை நாடி வரும் அடியார்களிடம் தாம் கனவில் கண்ட இனிமையான செய்தியை எடுத்துரைத்து, முருகப்பெருமானுக்குத் திருமஞ்சம் அமைக்கும் அமைப்பையும் விபரித்தார். அடியார்கள் புடைசூழவர பெரியசந்நியா சியார் எமது ஊரிலுள்ள பொதுமக்களிடம் மஞ்சம் செய்வதற்குத் தரமான மரங்கள் தேவை என்று கேட்டுக் கொண்டார்.



உலகப் பெருமஞ்சம்

பொதுமக்கள் மனமுவந்து அன்பளிப்பாக வழங்கிய மரங்களைச் சிரமதான முறை யில் அடியார்கள் தறித்துக் கொண்டு வந்து பெரியாரின் இல்லச் சூழலில் மலைபோலக் குவித்தார்கள். முருகப் பெருமானின் திரு மஞ்சம் செய்வதற்காகப் போதுமான மரங் கள் கிடைத்த போதும் சிற்ப வேலைக்குரிய ஆசாரிமாரைப் பெற்றுக் கொள்வதில் சிர மம் ஏற்பட்டது. முருகப் பெருமானே பெரிய சந்நியாசியார் உருவத்தில் தென்னிந்திய சிற்பாசாரியாரிடம் சென்று 'இணுவில் கந்தசுவாமி கோயிலுக்கு ஒரு புதிய மஞ்சம் செய்ய வருமாறு' கூறி அவ்விடத்துக்கு வரும் பாதையையும் தெரிவித்து மறைந்த ருளினார். அக்கணமே அவ் ஆசாரியார் தமது வேலைக்குத் தேவையான ஆயுதங் களையும் எடுத்துக்கொண்டு உதவியாட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களையும் அழைத்துக் கொண்டு இணுவிலை வந்தடைந்தார். முருகப் பெருமானின் அருளை எண்ணி பெரியசந்நியாசியார் மகிழ்ச்சியடைந்தார்.

### திருமஞ்ச வேலைகள் ஆரம்பம்

தமிழகத்திலிருந்து வந்த சிற்பாசாரியார், பெரியசந்நியாசியாரின் ஆலோசனையில் 1902 ஆம் ஆண்டு ஒரு நல்ல சுப தினத்தில் திருமஞ்சத்துக்கான அச்சை ஏற்றினார். சந்நியாசியாரின் வீட்டின் அயலில் இருக்கும் முருகன் ஆலயத்தின் தென்பகுதியில் இவ்வேலைகள் ஆரம்பமாயின. முருகனின் திருவருளும், பெரிய சந்நியாசியாரின் சித்து மகிமையும், விடா முயற்சியும், ஆசாரிமாரின் வேலைத் திறமையும் காரணமாக திருமஞ்சத்தின் பீடம் வரையான வேலைகள் நிறைவடைந்ததும் மஞ்சப் பணி இறையருளினால் தடைப்பட்டது. பெரியார் இறையருளை வேண்டித் தியானித்ததும் மிகுதி வேலைகளை கந்தசுவாமி கோயில் வளாகத்தில் செய்யுமாறு உணர்த்தியது. அடித்தளம் சில்லுகள் பூட்டப்பட்டு கந்தசுவாமி கோயிலுக்கு உருட்டிச் செல்லப்பட்டது. மஞ்சவேலைகள் ஆரம்பித்துச் செய்யப்பட்ட இடம் இன்றும் மஞ்சத்தடி என்றே அழைக்கப்படுகின்றது. அடித்தள மஞ்சம் இணுவில் கந்தசுவாமி கோவிலின் தென் கிழக்கு வீதியில் இருக்கும் மருத மரத்தின் கிழ் நிறுத்தப்பட்டு அதற்குரிய கொட்டகையும் அமைக்கப்பட்டு மிகுதி வேலைகள் சுறுசுறுப்பாக நடைபெறலாயின. இறைவனின் சித்தப்படி 1906 ஆம் ஆண்டின் தைப்பூசத் தினத்தன்று முதன்முதலாக திருமஞ்சம் வீதிவலம் வந்தது.

### திருப்பெருமஞ்சத்தின் சிறப்பு

இப்பெருமஞ்சம் முப்பத்தொன்பரை அடி உயரமும் மிகப் பிரமாண்டமான தோற்றமும் கொண்டது. இதன் அடிப் பாகத்திலிருந்து மேல் விமானம் வரை பல வகையான அமைப்புகளுடன் கூடிய சிற்பத் தொழில்நுட்ப வேலைகளும் உயிர் ஓவியங்களாகவே அமைந்துள்ளன. அண்டசராசரங்கள், முருகனின் திருவிளையாடல்கள், மனித வாழ்வின் சகல வளர்ச்சிப் பரிமாணங்கள், தேவர்களும், முனிவர்களும், கந்தர்வர்களும் முருகனை வழிபடும் காட்சிகள் யாவும் அடங்கிய சிற்ப, சித்திரக்காட்சிகள் மஞ்சத்தை அலங்கரிக்கின்றன. இம்மஞ்சத்தில் ஆங்காங்கே தொங்கவிடப்பட்டுள்ள 1008 சிறிய மணிகள் மஞ்சம் அசையும் வேளை ஓங்காரத்துடன் ஒலிக்கும். அசைவின்போது அதன் அற்புதக் காட்சி ‘ஆடி அசையும் சித்திரக் கூடமோ’ என்று பலரும் வியக்கும் அற்புதமான தோற்றத்தைக் கொண்டுள்ளது. இப்பெருமஞ்சத்தை நேரில் கண்டு வியந்த சிற்ப மேதைகளும் விற்பன்னர்களும் சாதாரணமாக இப்படியான அமைப்பையுடைய மஞ்சத்தை மனதார எண்ணியும் பார்க்கமுடியாது எனப் பெருமையளித்துள்ளனர். முருகப் பெருமான் தமக்கெனச் செய்வித்த இவ்வருட் சக்தியாலேயே இவ்வாறு அமைந்துள்ளதெனப் புகழ்ந்தனர். **இன்றும் கூட உலகின் எங்காவது இது போன்ற உயர்ந்த, அகன்ற, சிற்ப வேலைப் பாடுடைய பெருமஞ்சத்தைக் காண முடியாது.** அதனால் உலகப் பெருமஞ்சமாக உயர்ந்து நின்று எமது மண்ணின் பெருமையைப் பறைசாற்றுகின்றது. இப்பெருமஞ்சம் வருடாவருடம் தைப்பூசத்தன்றும், ஆனிமாதம் வரும் வருடாந்தப் பெருவிழாவின் பன்னிரண்டாம் திருவிழாவன்றும் பவனி வருவதைக் காணலாம்.

நூறு வருடங்களுக்கு முன், வருடாந்த பெருவிழாக்காலத் தேரோட்டம் பெரிய சந்நியாசியாரின் திருவுளப்படி ஏழு தேர் இணுவில் கந்தசுவாமி கோவிலில் இருந்து புறப்பட்டு காரைக்கால் சிவன் கோவில் விதியைச் சுற்றி வரும் பவனி நடைபெற்றுள்ளது. இத்தேர்ப் பவனிக்காகப் பெரியார் தேரோடும் வீதியை முப்பத்தாறு அடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகலத்தில் அமைத்துள்ளார். காலப் போக்கில் தேர்ப்பவனி இல்லாததால் வீதிகளும் குறுகிவிட்டன. பல தெய்வீக நிகழ்வுகளைக் கண்டு மகிழ்ந்த பெரியார் இப்பகுதியின் நாட்டார்பாடலுக்கும், கூத் துக் கலைக்கும் பெரும் ஆதரவு நல்கி யுமுள்ளார்.

### சமாதி நிலை

பெரிய சந்நியாசியார் தாம் சமாதியடை யும் காலத்தை முன்கூட்டியே அறிந்திருந் தமையால் சமாதிக்குரிய இடத்தையும் தேர்வுசெய்து அந்த இடத்தில் சமாதிக் கிடங்கையும் வெட்டிவித்து வைத்திருந் தார். முன்கூறிய நாள் நேரத்தில் சமாதியு மடைந்தார். இவர் சமாதியடைந்தது 1917 ஆம் ஆண்டு சித்திரை மாத திருவோண நட்சத்திரமாகும். இப்பெரியார் சமாதி யடைந்த இடத்தில் அவரால் வணங்கப் பட்டு வந்த வேல் நாட்டப்பட்டு மக்கள் வழி பாடு செய்தனர். அவ்வழிபாட்டிடம் மஞ் சத்தடி அருணகிரிநாத சிவசுப்பிர மணியர் ஆலயமாக வளர்ந்து உயர்ந்து காட்சிய ளிக்கிறது. இக்கோவிலில், பெரியாரின் சமாதித் திதியான சித்திரை மாத திரு வோணத்தன்று தீர்த்தத் திருவிழா நடை பெற்று வருகின்றது.

இப்பெரியார் முற்காலத்தையும் உணர்ந்த சித்தராக வாழ்ந்தமையால், வடிவேற் சுவாமிகள், தட்செணாமூர்த்தி ஆகியோ ரின் தந்தையர்கள் பெரியாரின் முதன் மைச் சீடராக இருந்தமையால் முன்கூட் டியே இவர்களின் பிறப்பையும் எதிர்காலச் சிறப்பையும் கூறியிருந்ததாக அறிய முடி கிறது. இணுவில் சந்நியாசியார் என எல் லோராலும் அழைக்கப்பட்ட இப்பெருஞ் சித்தரின் காலத்திருந்தே சமய நெறியும், கிராமியக் கலைகளும் வளர்ந்து இணுவை மண்ணின் மங்காப்புகழுக்கு வித்திட்டுள் ளதை யாவரும் அறிவர். இணுவில் மண் ணின் பெருமைக்கும், சிறப்புக்கும் இப் பெருஞ்சித்தர் வாழ்ந்து காட்டிய பாதை நீண்ட வரலாற்றுப் பாதையாகவே செல்கி றது.

இப்புனித மண்ணில் பிறந்த நாமனை வரும் செய்த பூர்வீக நல்வினைப் பய னென்றே கூறி இன்புறுவோமாக!

## ஜனாதிபதி பதக்கம் வென்ற முதல் மாணவி




யா/இராமநாதன் கல்லூரி நூற்றாண்டு காலத்தில் எமது ஊர்ப் பாடசாலையில் உயர் தரம் (2013) கலைப்பிரிவில் கல்வி கற்கும் மாணவியாகிய செல்வி கீதாஞ்ஜனி பொன் னானந்தம் மத்திய சுற்றாடல் அதி கார சபையின் கீழ் மேற் கொள்ளப்பட்டு வருகின்ற "சுற்றாடலைக் காப்போம்" என்ற தொனிப்பொருளிலே செயற்படும் சுற்றாடல் முன் னோடிப் படையணியில் ஜனாதிபதி பதக்கத்தினை வென்ற இலங்கையின் முதல் தமிழ் மாணவியாகத் திகழ்கிறார். அவரை 'இணுவில் ஒலி' வாழ்த்துகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணுவில் ஒலியை வாழ்த்துகின்றார்கள்

## செஞ்சொற்செல்வரின் வாழ்த்து



இணுவில் கிராமத்தின் மேன்மைகளை ஆவணப்படுத்தும் அற்புத முயற்சியாக வெளிவரும் 'இணுவில் ஒலி' கண்டு இன்புற்றேன். இப்பணியில் ஆர்வம் கொண்டு உழைக்கும் அனைவருக்கும் எனது இதயபூர்வமான வாழ்த்துக்களையும் நன்றிகளையும் சமர்ப்பித்துக் கொள்கின்றேன். இலண்டனில் வாழும் திருமிகு நடராசா சச்சிதானந்தன் அவர்களின் ஊர்ப்பற்றும் சைவத் தமிழ்ப்பற்றும் பெருமைக்குரியவை. அன்பர்கள் திரு. தம்பு சிவா, கலாபூஷணம் திரு.மூ.சிவலிங்கம், திரு.சிவலிங்கம் சரவணபவன் அனைவரது அயராத முயற்சியால் 'இணுவில் ஒலி' தொடர்கிறது. சர்வ தேசம் முழுவதும் வாழும் இணுவில் வாழ்மக்களை இணைக்கும் பாலமாக இணுவில் ஒலி விளங்கும் என்பதில் ஐயமில்லை. இணுவில் பெற்றெடுத்த சான்றோர் பெருமக்களின் படைப்புக்கள் முதல் இன்றைய தலைமுறையின் படைப்புக்கள் வரை இந்நூலில் அணி செய்யவிருப்பது பாராட்டுக்குரியது. இறையருளால் 'இணுவில் ஒலி' நித்தியம் மலரப் பிரார்த்தித்து வாழ்த்தி அமைகிறேன்.

**கலாநிதி ஆறு.திருமுருகன்,**
தலைவர் - ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.
தலைவர் - சிவபூமி அறக்கட்டளை.

## இணுவில் ஒலிக்கு எம் இதயத்து உதித்த வாழ்த்துக்கள்



இணுவில் ஒலியின் முதல் மூன்று இதழ்களையும் அதன் வெளியீட்டு நிறுவுனர் திரு நடராசா சச்சிதானந்தன் நேற்றைய தினம் எனக்குக் கையளித்தார். நேற்றிரவே அவற்றைப் பார்வையிட்டுப் பரவசமடைந்தேன். ஏனெனில் அவற்றில் இணுவில் மண்ணின் மணமும், ஈழத் தமிழின் இலக்கிய வாசனையும் சேர்ந்து கம கம என்று வீசி எம்மை மீண்டும் மீண்டும் வாசித்து மகிழுங்கள் எனக் கூடி வரவழைக்கின்றன. இணுவிலின் கோவில்கள், கல்வி நிலையங்கள், கலாசார ஆராதனைகள், அட்டைப் படங்களில் ஒளிசொரிந்து பேரொலியும் எழுப்புகின்றன.

தம்பு சிவா எனும் பிரபலமான எழுத்தாளர் திரு. தம்பு சிவசுப்பிரமணியம் அதன் இதழாசிரியர் என அறிந்து இன்னும் கூட மகிழ்கிறோம். ஏனெனில் அண்மையில் அவர் லண்டன் வந்திருந்தபோது இலக்கிய ஆர்வலர் திருமலை பாலா மூலம் அறிமுகமானோம். நாங்கள் எங்கள் நூல்கள் சிலவற்றைப் பரிமாறிக்கொண்டோம்.

இணுவிலைப்பற்றி முதலில் நான் அறிந்தது மறைந்த தமிழாசான் உயர்திரு சபா ஆனந்தர் மூலமே என்பதை பெருமையுடன் தெரிவிக்கிறேன். ஏனெனில் 1940களில் எமக்குச் சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலே என்றுமே நாங்கள் மறக்க முடியாத வகையில் தமிழும்திருக்குறளும் தேவநாகர மொழியும் பாடிக்கற்பித்த பெருமகன். அவரைப் பற்றிச் சீக்கிரம் இணுவில் ஒலியில் ஒரு கட்டுரை எழுத இருக்கிறேன் எனக் கூறி இச் சிறு வாழ்த்து மடலை முடிக்கிறேன். வாழ்க, இணுவிலின் நாமம்!

**பேராசிரியர் கோபன் மகாதேவா,**
MSc, PhD, Hon DLitt, FIET, FCMI, FRSPH



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பொ.பஞ்சாட்சரம்
இலண்டன்.

# சைவ மகாஜனா உருவாகத்தில் முன்னின்ற முருகேசு அப்பாக்குட்டி

இதிகாச காலந்தொட்டு இன்றுவரை இந்து சமுத்திரத்தில் ஓர் ஒப்பிலா இரத்தினமாக இலங்கையின் தலையாக அமைந்த யாழ்ப்பாண தீபகற்பத்தில் யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி யில் அண்ணளவாக நலாம் மைல் கல்லுக்கும் ஐந்தரை மைல் கல்லுக்கும் இடையில் அமைந்த அழகிய கிராமமே "இணை யில்" என்று ஆதியில் அழைக்கப்பட்ட இணுவில் என்னும் கிராமம். அரசர்களோடு பல கோயில்களையும் காணிப்பெயர் களையும் இங்கு காணலாம். பரராசசேகரப் பிள்ளையார் கோயில், செகராசசேகரப்பிள்ளையார் கோயில், அரசசோலை பிள்ளையார் கோயில், மன்னன் தோட்டம், சேவகன் காடு ஆகிய பெயர்கள் நல்ல உதாரணங்கள். இந்த நிலப்பரப்பில் பல சைவ மக்கள் மாண்புற வாழ்ந்து வருவாராயினர்.



அப்பாக்குட்டி
அவர்கள்

இவ்வாறு வாழ்ந்து வரும் வேளான்குடிகள் மத்தியில் வைத்திய பரம்பரை ஒன்று வருவதாயிற்று. கர்த்தர் என்னும் வைத்தியர் சீரும் சிறப்புமாக திகழ்ந்தார். எனவே இவர் பெயராலேயே இச்சந்ததியினர் வைத்தியர் கர்த்தர் பரம்பரை என்று அழைக்கப்படுகின்றனர். வைத்தியர் கர்த்தர் என்பர் குழந்தையர் வேலாயுதருக்கு முந்தியவராக இருக்கவேண்டும். அண்மைக் கால பத்திரங்கள் எதிலும் கர்த்தர் என்ற பெயர் காணப்படவில்லை. பல்லப்பை என்ற குறிஞ்சி இணுவில் கிராமத்தில் உண்டு. இந்தப் பகுதியிலும் கர்த்தர் பரம்பரை இருந்ததாக திரு அப்பாக்குட்டி முருகையா ஆசிரியர் கூறக் கேட்டிருக்கிறேன்.



மயில்வாகனம்
அவர்கள்

வைத்தியர் கர்த்தர் பரம்பரையில் திரு வினாசித்தம்பி முருகேசுவுக்கு ஏக புத்திரனாக அப்பாக்குட்டி 1865ஆம் ஆண்டு சைவமும் தமிழும் இசையும் நாடகமும் தழைத்தோங்கிய பல சித்தர்கள் வாழ்ந்த இணுவிலில் அவதரித்தார். இவருக்கு உடன்பிறப்புக்கள் எவரும் இல்லாதபடியால் சித்தப்பா, பெரியப்பா பிள்ளைகளான திருவாளர்கள் தம்பர் கனகசபை, கதிர்காமசேகரம்பிள்ளை, சின்னக்குட்டியர், மாரிமுத்து, ஆறுமுகம், நகேந்திரி, கனகர், கதிரவேலு, திருமதிகளான மாரிமுத்து, கண்ணாத்தை, சுப்பர் நாகமுத்து... ஆகியோருடன் மிகுந்த பாசத்துடன் வாழ்ந்து வந்தார்.



பொன்னையா
அவர்கள்

திரு அப்பாக்குட்டி தனிப்பிள்ளையாக இருந்தபடியால் மிகவும் செல்லமாகவும் கண்ணுங்கருத்துமாகத் தாய் தந்தைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரால் வளர்க்கப்பட்டு வந்தார். ஏட்டுக் கல்வியுடன் பல கலைகளையும் வீட்டிலேயே தந்தையிடமும் காலத்திற்குக் காலம் தென்னிந்தியா விலிருந்து வரும் அறிஞர், சித்தர் முதலியோரிடம் இருந்தும் கற்றார். இவரது தந்தையாரிடமே வைத்தியத்தையும் கற்று சிறந்த வைத்தியராகத் திகழ்ந்தார். விஷகடி வைத்தியம் உட்பட சித்தவைத்தியம், கர்த்தர் பரம்பரையின் குடும்பச்சொத்து, உயிர் ஆபத்தை உண்டு பண்ணக் கூடிய வருத்தத்தால் பீடிக்கப் பட்டு, சேடம் இழுத்து, மூச்சுவிட கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கும் நோயாளர்களுக்கு சிறிது ஆறுதல்படுத்த ஏதாவது செய்யுங்கள் என்று அலறிக் கொண்டு இவரை நாடி ஓடி வருபவர்களுக்கு அன்பான ஆறுதல் வார்த்தைகள் கூறி ஏற்ற மருந்தைக் கொடுத்து நோயைத் தீர்ப்பார். வாழ்க்கையின் இறுதிக் கட்டத்தை அடைந்தவர்களுக்கு எந்த மருந்தும் சித்திப்பதில்லை. இந்த நேரத்தில் மாத்திரம் பொட்டகத்தில் பக்குவமாய் பட்டு துணையில் கட்டி வைத்திருக்கும் மாத்திரைக் கட்டையை எடுத்து பாவிப்பார். மாத்திரை கட்டையைத் தானானவே பாலில் உரைத்து நோயாளிகளுக்கு பருக்குவார். உடனடியாகவே சேடம் இழுப்பதெல்லம் நின்று நோயாளியின் மூச்சுத் திணறலும் மறைந்து கதைக்க முடியாமல் இருந்தவர் கதைக்கக் கூடிய நிலைக்கு வந்துவிடுவர். மீண்டும் நோயுற்று இறுதிக் கட்டத்தை அடைந்தவர்களுக்கு சேடம் இழுத்தல், மூச்சுத் திணறல் இருக்கமாட்டாது. உயிர் அமைதியாக பிரியும். இதுதான் இந்த அரு மருந்தின் சிறப்பு. இந்த மாத்திரைக் கட்டை யின் உரைத்துக் கொடுத்து ஆயிரக்கணக்கான நோயாளிகளின் இயமவேதனைகளை தீர்த்திருக்கின்றார் திரு. அப்பாக்குட்டி. 1938 ஆம் ஆண்டு முற்பகுதியில் இவர் வெளியில் நடமாடுவதை குறைத்துக் கொண்டபடியினால் இவரது இளைய மகன் ஆசிரியர் திரு. முருகையா மாத்திரைக் கட்டை உரைத்துக் கொடுக்கும் பணியை செய்து ஆயிரக்கணக்கான நோயாளிகளை ஆறுதல் படுத்தியிருக்கிறார். திரு முருகையா அவர்கள் உள்ளூர் யுத்தம் காரணமாக 1990 இற்குப் பின்னர் பல வீடுகளில் மாறி மாறி இருந்திருக்கிறார். இந்தக் காலகட்டத்தில் அருமந்தான மாத்திரைக் கட்டை மாயமாக மறைந்து விட்டது. பலமுயற்சிகள் எடுத்தும் அந்த அருமருந்து அகப்படவே இல்லை. இது ஒரு பெரிய இழப்பாகும். மாத்திரைக் கட்டை இருந்திருந்தால் அதைப் பகுப்பாய்வு செய்து ஒரு புதிய மாத்திரை கட்டையைச் செய்திருக்கிலாம். இந்த மாத்திரை கட்டை சம்பந்தமான செய்முறை ஒன்றும் நம்மவர் ஒருவருக்கும் தெரியவில்லை. ஏட்டுப்பிரதிகள் பல இருந்தன. அவையும் காலத்தால் அழிந்துவிட்டன.

திரு. அப்பாக்குட்டி அவர்கள் வைத்திய தொழிலுடன் மேட்டுப்பயிர்ச் செய்கையையும் இணுவிலில் பெரிய அளவில் செய்து வந்தார். இதைவிட சண்டிலிப்பாயில் மனைவி விசாலாட்சி மூலம் சீதனமாக வந்த வயற் காணிகளும் பனந்தோப்புக் களும் இருந்தன. அங்கு நெல், சனல், எள்ளு போன்ற பயிர்களும் செய்து வந்தார். இவர் வசித்த வீடு நாற்சார் வீடு என்னும் வசதியான வீடு. வீட்டின் நடுவில் காற்று வெளிச்சம் வரக்கூடிய முற்றம். முற்றத்தைச் சுற்றிவர விறாந்தைகளும் அறைகளும். வெளிப்பக்கத்தில் கிழக்கே அடுப்படியும் விறாந்தையும் வடக்கேயும் ஒரு விறாந்தை. வடக்கே உள்ள விறாந்தையைச் சேர்ந்தாற் போல் தலைவாசல் என்று சொல்லப்படும் பாரிய ஓலைக்கொட்டில். மழைக் காலங்களில் இவரது இரட்டை மாட்டு வண்டி நேரே தலைவாசலுக்கு வந்து இவரை நனையாமல் இறக்கிவிடும்.

1930 ஆம் ஆண்டு வைகாசி மாதமளவில் வைத்தியர் அப்பாக்குட்டி வீட்டின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கு வெளி விறாந்தை ஒரு பாடசாலை யாக உருவெடுத்தது. இது சம்பந்தமாக அமரர் திரு தம்பையா நடராசா ஆசிரியர் அவர்கள் சைவமகாஜன வித்தியாசாலை யில் இந்த பாடசாலை ஆரம்பித்த விதம் பற்றி ஒரு பொது கூட்டத்தில் பேசிய வற்றைப் பார்ப்போம்.

"நான் அப்பொழுது அமெரிக்கன் மிஷன் பாடசாலையில் கற்றுக்கொண்டு இருந்தேன். அன்று காலையும் வழக்கம் போல சில மாணவர்களுடன் பாட சாலைக்குச் சென்று கொண்டிருந்தேன். எங்களை சில பெரியவர்கள் வழிமறித்து இனி உங்களுக்குப் பள்ளிக்கூடம் அப்பாக் குட்டியர் வீட்டில்தான் என்று சொல்லிக் கூட்டிச் சென்றார்கள். அங்கு தொடர்ந்து சில நாட்கள் வகுப்புக்கள் நடந்தன. பின்பு அவர் வீட்டிற்கு முன்னால் இருந்த காணி யில் கொட்டில் போட்டு பாடசாலை நடந் தது"

1930களில் இணுவில் மக்கள் அனை வரும் சைவ சமயத்தவர்களாகவே இருந் தனர். எனவே பெற்றோர் தங்கள் பிள்ளை களைச் சைவசூழலில் சைவ பாரம்பரியத் தில் கற்பிக்க விரும்பினார்கள். அது ஒரு மக்கள் போராட்டமாகவே வெடித்தது. அந்த நிகழ்ச்சியின் ஒரு சிறு அங்கத்தை தான் மேலே ஆசிரியர் சொல்ல கேட்டீர் கள். அமெரிக்கன் மிஷன் பாடசாலைக்கும் புதிதாக அமைத்த பாடாசாலைக்கும் இடைத்தூரம் 300 மீற்றர்தான். எனவே ஆங்கிலேய அரசாங்கம் புதிதாக ஆரம் பித்த பாடசாலையை அங்கீகரித்து நிதி உதவி செய்ய பின்னின்றது. ஒரு கிறிஸ்த வப் பாடசாலைப் பிள்ளைகளைச் சேர்த்து உருவாக்கிய சைவ மகாஜன வித்தியா சாலையை வந்து பார்க்கவே பின்நின்றது. இந்தத் தருணத்தில் கல்விக் கந்தோரில் வட்டாரப் பரீட்சை உத்தியோகத்தராக இருந்த சதாசிவ ஐயர் என்பவரது உதவி பலன் தரத் தொடங்கியது. இந்தக் கால கட்டத்தில் வேதனம் ஏதும் பெறாமல் இந் தப் பாடசாலையில் ஆரம்பத்தில் படிப்பித்த சைவப் பெரியார் திரு சேதுலிங்கம் (செதர்ச் சட்டம்பியார்), சைவ உபாத்தியார் திரு சபா பதிப்பிள்ளை ஆகியோரை நாம் நன்றியு டன் நினைவுகூரவேண்டும்.

ஆரம்ப காலத்தில் கட்டடங்கள் கட்ட வும் ஆசிரியருக்கு ஊதியம் வழங்கவும் பெரிய நிதி தேவைப்பட்டது. அந்த நிதியை உரிய நேரத்தில் உதவிய பெருவள்ளல் திருவாளர் சிதம்பரநாதர் மயில்வாகனம். இவர் உடையார் சிதம்பரநாதரின் மகன். சிங்கப்பூரில் புகையிரதத் திணைக்களத் தில் உயர் உத்தியோகத்தில் இருந்தவர். இப்படியாக இருக்கும் நேரத்தில் பாட சாலையின் அன்றாட கடமைகளைச் செவ்வனே நிர்வகித்து வந்தவர் காணிச் சுவாந்தரான திரு கதிர்காமசேகரம்பிள்ளை பொன்னையா அவர்கள். இவரைக் கல் வீட்டுப் பொன்னையா என்று ஊரவர் அழைப்பர். ஊரவர் ஆதரவுடனும் திரு. மயில்வாகனத்தின் ஆசியுடனும் திரு. கதிர்காமசேகரம்பிள்ளை பொன்னை யாவை சைவமகாஜன வித்தியாசாலை யின் முகாமையாளராக நியமித்து அவரின் பெயருக்கே திரு. அப்பாக்குட்டி மூன்று பரப்புக் காணியை பாடசாலை நடத்த தர்ம சாதனமாகக் கையளித்தார்.

இந்த முகாமையாளரே கட்டடங்களை யும் கட்டி சிறந்த ஆசிரியர்களையும் தேடிப் பிடித்து நியமித்து உரிய புள்ளி விவ ரங்களை கல்விக் கந்தோருக்கு சமர்ப் பித்து சைவ மகாஜன வித்தியாசாலையை உதவி நன்கொடை பெறும் பாடசாலை யாக மாற்றினார். பாடசாலையைச் சுற்றிவர இருந்த காலஞ்சென்றவர்களான அப்பாக் குட்டி பொன்னம்பலம், அப்பாக்குட்டி சிவஞானம், குருசாமி ஞானேஸ்வரி ஆகி யோருக்குச் சொந்தமான 3 பரப்புக் காணி யையும் பாடசாலை பாவிப்பதற்கே அனு மதித்தனர். 1960ஆம் வருடம் பாடசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் எல்லாம் அரச உடமையாக்கப்பட்ட பொழுது இந்தக் காணியும் அரச உடமை யானது. திரு அப்பாக்குட்டியின் மகள் அன்னப்பிள்ளை செல்லப்பாவுக்கும் திரு அப்பாக்குட்டி முருகையாவுக்கும் திரு அப்பாக்குட்டியரால் கொடுக்கப்பட்ட வீடும் காணியும் சேர்த்து ஆறு பரப்பு ஒரு பகுதி விலையாகவும் மற்றப் பகுதி இனாமாகவும் பாடசாலைக்குக் கிடைத்தது. 1930 இல் 30 பிள்ளைகளுடன் ஆரம்பித்த ஒரு சிறு பாட சாலையை 350 மாணவர்கள் படிக்கின்ற பாரிய வித்தியாசாலையாக்கி, 1953 இல் திருவாளர் பொன்னையா அவர்கள் சிவ பதம் அடைந்தார். இந்த முகாமையாளர் என்னை ஆங்கில உதவி ஆசிரியர் பதவி யில் 1949 ஆம் ஆண்டு நியமித்தார் என் பதை நன்றியறிதலுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். பதினெட்டு மாதங்களின் பின் எனக்கு உள்நாட்டுத் திணைக்களத் தில் தொழில் கிடைத்ததால் ஆசிரியத் தொழிலை விட்டுவிட்டேன்.

இணுவில் கந்தசுவாமிப் பெருமான் மீது திரு அப்பாக்குட்டி அவர்கள் மிகுந்த பக்தி உடையவராகத் திகழ்ந்தார். இவரது சகோ தர முறையான திரு. கதிர்காமசேகரம் பிள்ளை இணுவில் கந்தசுவாமி கோயிலில் இருக்கும் உலகப் புகழ்பெற்ற மஞ்சத்தை செய்வித்த பெரிய சந்நியாசியாரிடம் பக்தியும் பெருமதிப்பும் உடையவர். பெரிய சந்நியா சியார் சிவபதம் அடைந்த பொழுது அவரை அடக்கஞ்செய்து அந்த இடத்தில் ஒரு முருகன் ஆலயம் கட்ட ஆக்கமும் ஊக்க மும் கொடுத்தார் இப்பெருந்தகை. பிரசித்திபெற்ற மஞ்சம் செய்த புண்ணிய பூமியில் கட்டப்பட்ட ஆலயத்தை மஞ்சத் தடி முருகன் ஆலயம் என்றே அழைக்கின் றனர். கோயில் கட்டி முருகனைத் ஸ்தா பித்து கும்பாபிஷேகத்தையும் இவரே முன் னின்று நடத்திச் சிறப்பித்தார். இக்கோயி லுக்கு திருவிழாக்கள் ஏற்படுத்தப்பட்ட பொழுது கொடியேற்றத் திருவிழாவையும் ஐப்பசிக் கார்த்திகை திருவிழாவையும் தான் செய்ய ஒப்புக்கொண்டார். பெரிய சந்நியாசியரின் அண்ணன் வேலாயுதச் சந்நியாசியாரிடம் அபிமானம் கொண்டு அவர் செய்யும் தொண்டுகளுக்கு உதவிக் கரம் நீட்டினார்.

சித்திரை வருடப்பிறப்பை திரு அப்பாக் குட்டி சிறப்பாக கொண்டாடுவார். வருடப் பிறப்புக்கு முந்திய இரவிலேயே இவர் அயலில் உள்ளவர்களுடன் சேர்ந்து சைவ மகாஜனாக் கல்லூரிக்கு தென்கிழக்குப் பக்கமாக நின்ற இலுப்பை மரத்தின் கீழ் பொங்குவார்கள். திரு அப்பாக்குட்டியின் வீட்டின் நடு முற்றத்தில் பல இரும்புச் சட்டி களும் பானைகளும் வைத்து வடை, மோத கம், அரியதரம், பாலுரட்டி முதலிய பல காரம் செய்வார்கள். இரவு 10 மணியளவில் வீட்டின் ஓர் அறையில் சிவன், அம்மன் படத்திற்கு முன்னால் பொங்கல்பானை யையும் பலகாரங்களையும் மாம்பழம் பலாப்பழம், வாழைப்பழம் ஆகிய கனி வர்க் கங்களையும் மடை பரவி, பூசையாகத் தேவாராம் புராணம் படிக்கப்படும். இதற் கிடையில்வெளி விறாந்தையில் நோயாளி களுடன் கதைத்துக்கொண்டும் சிகிச்சை செய்துகொண்டும் இருக்கும் திரு அப்பாக் குட்டி அழைக்கப்டுவார். அவர் கால் முகம் கழுவி, நீறணிந்து, ஒரு செம்பில் நீர் கொண்டு வந்து மடை மாற்ற ஆயத்தமாக நிற்பார். தேவார புராணம் பாடி முடிந்தவு டன் அவரே மடைமாற்றி தீபத்தைக் காட்டு வார். மடை மாற்றுவதென்பது படைத்த பண் டங்களை கடவுளுக்கு அர்ப்பணிக்கும் முக மாக நீரை மூன்று முறை தெளித்தல். பின்பு யாவரும் பிரசாதம் உண்டு மகிழ்வார்கள்.

பின்பு ஒரு நல்ல நாளில் கைவிசேஷ மும் ஏர்பூட்டு விழாவும் நடைபெறும். கைவிசேஷம் என்றால் சிறுவர்கள் எல் லோருக்கும் காசுகள் பெறப்போகிறோம் என்று ஒரே மகிழ்ச்சி, படத்துக்கு முன்னால் பூரண கும்பம் வைத்து வாழைப்பழம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றிலை, பாக்கு முதலியனவும் ஒரு தட்டில் 5 சதக்குற்றிகளும் மற்றைய தட்டில் 1 சதக் குற்றிகளும் பரப்பிவைக்கப்படும்.

திரு அப்பாக்குட்டி படத்திற்கு தீபம் காட்டிவிட்டு முதலில் பெரியவர்களுக்கு கைவிசேஷம்கொடுப்பார். அதிகமாக 1 பணம் கொடுக்கப்படும் ( 6 காசுகள்). பின்பு சிறியவர்களுக்கு 3 சதம் கொடுக்கப்படும். அந்த 3 சதத்திற்கு 3 விதமான பண்டங்கள் வாங்கலாம். 1 சதத்திற்கு சுண்டற் கடலை வாங்கினால் நாலு ஐந்து சிறுபிள்ளைகள் சாப்பிடலாம். 1 சதத்திற்கு இரு கை நிறையக் கச்சான் வாங்கலாம். 1 சதத்திற்கு கறுவா வாங்கினால் 10 பிள்ளைகள் நாள் முழுக்கக் கொறிக்கலாம்.

“சீரைத் தேடின் ஏரைத்தேடு” என்பது பழமொழி அப்பாக்குட்டி வீட்டின் மேற்கு விறாந்தைச் சுவரில் ஏருக்கு அன்று மஞ்சள் நீர் தெளித்து துப்புரவு செய்து திருநீற்று குறி இழுத்து பொட்டும் இட்டு கணபதியை வணங்கி ஏரைத்தூக்கி திரு அப்பாக்குட்டி ஒருவரின் தோளில் வைப்பார். அந்த விழாவைச் செல்லையா அத்தான் என்று அனைவராலும் அன்பாக அழைக்கப்படும் ஒருவரே முன்னின்று நடத்துவார். ஏரைத்தூக்கி ஒருவரின் தோளில் வைப்பதோடு திரு அப்பாக்குட்டியின் பங்கு முற்றுப் பெற்று விடும். அவருக்கான பல நோயாளிகள் காத்துக்கொண்டு நிற்பார்கள். இந்தச் செல்லையா அத்தான் என்பவர் திரு அப்பாக்குட்டியின் மருமகன் முறையானவர். செல்லையா அத்தான் தலைமையில் ஏரோடு ஒரு சிறு ஊர்வலம் மக்மக்கிளியேட் வைத்தியசாலைக்கு வடக்கே உள்ள நீலாம்பற்றை என்ற தோட்டத்திற்கு போகும். ஏற்கனவே அங்கு கொண்டு செல்லப்பட்ட சோடி மாடுகளை ஏரில் பூட்டி மூன்று வட்டங்கள் நாளுக்கு உழப்படும். அங்கு சங்கரநாதர் என்னும் ஒரு பெரியார் பானையில் தேநீர் ஆயத்தமாக வைத்திருப்பார். அதை அவர் ஒரு தொண்டாகவே செய்து வந்தார். அந்த வட்டாரத்திலுள்ள பல கமக்காரர்கள் அங்கு வந்து களையாறுவார்கள். ஏர் பூட்டு விழாவுக்கு கொண்டு வந்த பலகாரங்களையும் பழங்களையும் சாப்பிட்டு சங்கரி அப்பாவின் தேநீருடன் ஏர் பூட்டு விழா இனிது நிறைவுபெறும். திரு அப்பாக்குட்டி காலத்திற்குப் பிறகு இவ் விழா மறக்கப்பட்டுவிட்டது. தமிழர் அனைவரும் கொண்டாடும் தைப்பொங்கல் விழாவில் திரு அப்பாக்குட்டியாரின் ஒரு சிறப்பு என்னவென்றால் மார்கழி மாதத்தில் வண்ணக் கோலத்தில் ஏற்றிய பிள்ளையார் எல்லாவற்றையும் ஒரு சிறு தேர்கட்டி மலர்களாலும் துணிகளாலும் அலங்கரித்து அயலவர்களின் பிள்ளைகளையும் சேர்த்து மன்னன் தோட்டத்தில் உள்ள ஒரு பாவனையில் இல்லாத கிணற்றில் வாலிபர்கள் கொண்டு சோர்ப்பார்கள். திரு அப்பாக்குட்டியின் பேரன் காலஞ்சென்ற ஆயுள்வேத வைத்தியர் அழகேசு நாகையாவே தடிகளாலும் வண்ணக் கடதாசிகளாலும் தேரைக் கட்டுவார்.

திரு அப்பாக்குட்டியின் பாரியார் திருமதி விசாலாட்சி கோயில், குளம் என்று அலட்டிக்கொள்வதில்லை. அவருக்கு கணவனே கண்கண்ட தெய்வம். மேலும் பொங்கல் பூசை என்று வீட்டிலேயே அடிக்கடி நடக்குந்தானே? சமையல் வேலை செய்ய மகளும் வளர்ப்புப் பிள்ளைகளும் இருப்பார்கள். திரு அப்பாக்குட்டியின் வசதியான வாழ்க்கைக்கு முக்கிய காரணம் விசாலாட்சியின் ஒத்துழைப்பும் விடா முயற்சியும்தான். திரு அப்பாக்குட்டி வீட்டில் பழஞ்சோறும் பழம் தண்ணியும் தான் காலைச்சாப்பாடு. காலை 10 மணியளவில் போகின்ற வருகின்ற எல்லோரையும் கூப்பிட்டு அப்பாக்குட்டியின் மூத்த மகள் அன்னம் (திருமதி அன்னப் பிள்ளை செல்லப்பா) பழஞ்சோறும் மரவள்ளிக் கிழங்குக் கறியும் சொதியும் சேர்த்துக் குழைத்து ஒரு திரளை சோறு கொடுப்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பாக்குட்டியரும் வெளி விறாந்தைக் திண்ணையில் இருந்து கொண்டு "அன்னம் அன்னம் பசி ஆற்றிவிடு" என்று வருகின்ற விருந்தினர்களை கவனித்துக் கொண்டு இருப்பார். அவர் வீட்டில் அடிக்கடி வந்து தங்குபவர்கள் பலர். கறுவல் சாத்திரியார், அவர் மகன் ஐயாத்துரைச் சாத்திரியார், எண்ணைகார கந்தையா, வைத்தியம் பெறும் பொருட்டு தங்குபவர்கள், விசக் கடியால் சாமத்தில் வருபவர்கள் என்று இப்படிப் பலர். இவர்களை எல்லாம் மனம் கோணாமல் உணவளித்து வீட்டிலேயே தங்கவைத்து பராமரிப்பார். மாலையில் தேநீர் கொடுப்பதென்றால் 30, 40 பேருக்கு 4 மணியில் இருந்து 5 மணி வரை கொடுக்க வேண்டியிருக்கும். இந்த வேலையை ஒரு பிரமச்சாரியாக இருந்து மருந்து பதப்படுத்தும் தொழிலைச் செய்து வந்த அப்பாக்குட்டியின் சகோதரம் முறையான கனகசபை என்பவரே செய்வார். இவர் 1949இல் சிவபதம் அடைந்தார். அப்பாக்குட்டியின் வீட்டில் அடிக்கடி ஏதாவது கொண்டாட்டம் நடந்தபடியே இருக்கும். அது வீட்டு அம்மனுக்கு பொங்கல் பூசை அல்லது திவசம் திதி என்றிருக்கும். இதற்கு நண்பர்கள், அயலவர்கள், உறவினர் என்று எல்லோரும் அழைக்கப்படுவார்கள். ஐந்து ஆண்களுக்கும் மூன்று பெண்களுக்கும் தந்தையான அப்பாக்குட்டி 1938 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் சிவபதம் அடைந்தார்.

"மிகினும் குறையினும் நோய் செய்யும் நூலோர் வளி முதலா எண்ணிய மூன்று"

வாதம், பித்தம், சிலேத்துமம் என்று மருத்துவ நூலோர் கணித்துள்ள மூன்றில் ஒன்று அளவுக்கு அதிகமானாலும் குறைந்தாலும் நோய் உண்டாகும்.

## மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டி

பாடசாலை அதிபர்கள், வெளிநாட்டுப் பிரதிநிதிகள் ஆகியோரின் வேண்டுகோளுக்கு இணங்க கட்டுரைகள் அனுப்பும் காலம் பிற்போடப்பட்டுள்ளது. மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டிக்கான கட்டுரைகளை 31.03.2013 வரை அனுப்பலாம்.

**இப்போட்டி மூன்று பிரிவுகளாக நடத்தப்படும்**

01) கீழ்ப்பிரிவு (10 வயதுக்குள்)
02) மத்திய பிரிவு (11 – 15 வயது வரை)
03) மேற்பிரிவு (16 –20 வயது வரை)

**கட்டுரைத் தலைப்புகள்**

01) கீழ்ப்பிரிவு – **'நான் விரும்பும் பெரியார்"(150 சொற்கள்)**
02) மத்திய பிரிவு – **இயற்கை வளங்களைப் பாதுகாப்போம்" (300 சொற்கள்)**
03) மேற்பிரிவு – **'இன்றைய மாணவர்கள் எதிர்நோக்கும் சவால்களும் அதற்கான தீர்வுகளும்" (நான்கு புல்ஸ்காப் தாள்)**

கட்டுரைகள் யாவும் பாடசாலை அதிபர் ஊடாக 31.03.2013 இற்கு முன் கிடைக்கக் கூடியதாக கட்டுரைப் போட்டி, 'இணுவில் ஒலி', 9–2/1 நெல்சன் இடம், கொழும்பு – 06 **('Inuvil oli', 9-2/1 Nelson Place, Colombo - 06, Srilanka)** என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படவேண்டும்.

- சிறந்த கட்டுரையாளர்களுக்கு விருதுகளும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.
- புலம்பெயர்ந்த நாடுகளில் வாழும் மாணவர்களும் தாங்கள் கல்வி கற்கும் தமிழ்ப் பாடசாலை மூலமாக பங்குகொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

தம்பு சிவா

# வாழவைத்த தெய்வம்



மனம்விட்டுப் பேசிப் பார்த்தேன். சுமதி ஒரே பிடிவாதமாக மறுத்துவிட்டாள்.

"தம்பி என்னைப் பார்க்க வேணும் எண்டதுக்காக உன்ன நம்பி வந்தவள விட்டுப் பிரிஞ்சிருக்கலாமே. அவள் பாவம் கூட்டிக்கொண்டு போராசா"

"இல்லை அம்மா. உங்கள தனிய விட்டுப் போட்டு நான் எப்படி போறது?"

"இல்ல ராசா இஞ்ச வரவர பிரச்சினை கூடிக்கொண்டே போகுது. இந்தப் பிஞ்சுகள் ரண்டையும் காப்பாத்த வேண்டாமே? சுமதி சொல்லுற மாதிரி நீ கனடாவுக்குப் போறதுதான் நல்லது"

சுமதியின் தாய், தகப்பன், சகோதரங்கள் எல்லாம் கனடாவில். அவர்களின் வற்புறுத்தலால் சுமதி அழுங்குப் பிடியாய் நிற்கின்றாள். எவ்வளவோ சொல்லிப் பார்த்தும் அவள் தான் கொண்ட நிலையில் இருந்தும் மாறவில்லை.

"சுமதி நான் ஒரு பட்டதாரி ஆசிரியன். அந்த உத்தியோகத்துச் சம்பளத்தோடு, ரியூசன் கொடுப்பதாலயும் கணிசமான தொகை வருகுது. ஊரோட சொந்த வீடு. அத்தோட என்னை விட்டால் அம்மாவுக்குத் துணையெண்டு இருக்க ஒருவரும் இல்லை. அதால..."

அதால..." என்ன இழுக்கிறியள்?"

"கனடா ஆசையை விட்டு விட்டு இஞ்சை இருப்பம்"

"அங்க எல்லாரும் நல்லாயிருக்கேக்க நாங்கள் மட்டும் இஞ்ச இருந்து மட்டையடிக்கிறதே?"

"என்ன நல்லாயிருக்கினம். எஞ்சினியருக்குப் படிச்ச உன்ர மூத்த கொண்ணன் வாச்சர் வேலை பார்கிறானாம். உன்ர மற்ற அண்ணன் சுரேஷ் ஹோட்டலில கோப்பை கழுவுகிறானாம்"

"என்ன வேலை செய்தாலும் நல்ல காசு கிடைக்குதல்லே. வீடு, கார் எண்டு எல்லாம் சொந்தமாக வச்சிருக்கினம். எல்லாரும் அப்பா அம்மாவோட கடைசி காலத்தில் ஒண்டாயிருப்பம் எண்டெல்லே அண்ணன்மார் பொன்சர் பண்ணி எங்களை எடுப்பிக்கினம். எல்லோருக்கும் இப்படிச் சந்தர்ப்பம் கிடைக்காது. நீங்கள் எங்களோட வாறத்த விட்டுவிட்டு கொம்மாவோட கட்டிப்பிடிச்சுக் கொண்டு இருப்பம் எண்டு சொல்லுறியள்"

"சுமதி உனக்கு உன்ர அப்பா அம்மா எப்படியோ அப்பிடித்தான் எனக்கும் என்ர அம்மா பெரிசு. சின்ன வயசில் அப்பாவைப் பறிகொடுத்து நின்ற எனக்கு அம்மாதான் எல்லாம். தன் துயர் பாராது அயலட்டையிலுள்ள வீடுகளுக்குச் சென்று மா இடிச்சுக் கொடுக்கின்ற பணத்தில என்னையும் வளர்த்து படிப்பிச்சு இந்த நிலைக்குக் கொண்டு வந்த என் தாயைத் தனிய இஞ்ச விட்டுவிட்டு என்னால கனடாவுக்கு வர முடியாது. தயவு செய்து உன்ர மனதை மாற்றிக் கொண்டால் உனக்கும் நல்லது எனக்கும் நல்லது"

"இந்தப் பாழ்பட்ட ஊரில பட்டிக்காடுகளோட என்னால இருக்க முடியாது. நீங்கள் வராட்டி இஞ்ச இருங்கோ நானும் பிள்ளையளும் போறம்."

"உன்னைத் திருத்தேலாது. நீ போறதெண்டால் போ. நான் வரமாட்டன் அம்மாவை விட்டுப் போட்டு"

"தம்பி அற்புதன் என்னைப் பாக்க எத்தனை பேர் இருக்கினம். நீ சுமதி சொல்லுற மாதிரி கனடாவுக்குப் போராசா"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அம்மா அவள் விசரி, வெளிநாட்டு மோகத்தில் கத்துகிறாள். நீங்கள் பேசாமல் இருங்கோ. நான் உங்களைத் தனிய விட்டு ஒரு இடமும் போகமாட்டன். தயவு செய்து என்னைத் தொந்தரவு செய்யாதேங்கோ"

● ● ●

"கற்பகம் அக்கா"

"யாரடி பிள்ளை பறுவதமே! வா இரு என்ன அலுவலாய் வந்தனி?"

"ஒண்டுமில்ல அக்கா. கனநாளாய் இந்தப் பக்கம் வரேல்ல. உங்கள ஒருக்கா பாத்துவிட்டு போகலாமெண்டு வந்தனான்"

"சரி. இந்தா தேத்தண்ணியைக் குடி. கொக்காவின்ரை பெடியனை போனமாதம் தொடக்கம் கணேல்ல எண்டு கதைச் சினம். பெடியன்ரை பாடு என்னவாம்?"

"ஒண்டுமாய் தெரியேல்ல. உயிரோடை இருக்கிறானோ அல்லது கொன்று போட்டாங்களோ தெரியாது. அத்தானும் என்ரை அவரும் தேடாத இடமில்லை. பொலிசிலும் அறிவிச்சு, மனித உரிமைகள் கந்தோரிலும் சொல்லியாச்சு. இற்றை வரை ஒரு பிரயோசனமும் இல்லை. அக்காவைப் பாக்கேலாது ஒரெயொரு பிள்ளையையும் பறிகொடுத்து விசர் பிடிச்ச மாதிரியல்லே இருக்கிறா. இஞ்ச பிடிக்கிறவையை தூர இடத்துக்குக் கொண்டுபோய் முடிச்சுப் போடுவாங்களாம் எண்டு சனம் கதைக்கினம். ஆனால் இந்தப் பெடியனை யார் பிடிச்சு என்ன செய்தாங்களோ தெரியாது. போன கிழமை இரண்டு மூண்டு இடங்களில் இளம் பெடியளைக் காணேல்ல எண்டு தாய் தகப்பன் சகோதரங்கள் மனித உரிமைகள் கந்தோரில வந்து குழறிக் கத்துதுகளாம் எண்டு இவர் வந்து சொன்னவர்."

"அப்படியே சங்கதி. இப்ப இளம் பிள்ளைகளை வீட்டில் வைச்சிருக்கிறது மடியுக்குள்ள நெருப்பைக் கட்டிக்கொண்டு இருக்கிறமாதிரிணெ்டு சொல்லன்."

"சரி அக்கா நான் ஒரு கதை கேள்விப்பட்டன். உண்மைதானோ? உங்கட மகனும் மருமேளும் பிள்ளைகளும் கனடாவுக்குப் போகப்போயினமாம். அப்ப நீங்கள் தனிய இருந்து என்ன செய்யப் போறியள்?"

"ஓமடி பறுவதம். நாடு இப்ப இருக்கிற நிலமேல அதுகள் அங்க போயெண்டாலும் ஆறுதலாக இருக்கட்டுமே. எனக் கென்ன இண்டைக்கோ நாளைக்கோ எண்டு இருக்கிறனான்; அதுகளை எனக் காண்டி மறிக்கலாமே?. மகன்தான் உன்னை விட்டுப் போக மாட்டன் எண்டு சொல்லுகிறான். அவனும் பாவம். ஒரு பக்கத்தால மனிசிக்காறி விடாப்பிடியாக நிற்கிறாள். பிறந்தநாள் தொடக்கம் என்னோடையே இருந்த வாழ்ந்தவன் என்னைப் பிரிய முடியாமல் கஷ்டப்படுகிறான். உள்ளதைச் சொன்னாலென்ன எனக்கும் பிள்ளையை விட்டுச் பிரிஞ்சு இருக்கேலாது"

● ● ●

கற்பகம் வாழ்க்கையில் பட்ட கஷ்டங்கள் சொல்லி ஆறாது. கற்பகத்தின் தாய் கற்பகம் பிறந்த அன்றே இறந்துவிட்டார். தகப்பன் சிறியதாயை இரண்டாம் தாரமாக மணம் முடித்துக்கொண்டார்.

ஆரம்பத்தில் சிறியதாயார் கற்பகத்தில் அன்பு காட்டினாலும், அவர் அடுத்தடுத்து பிள்ளைகளைப் பெற்றெடுத்ததும் கற்பகத்தின் மேலுள்ள அக்கறை குறைந்துவிட்டது. பள்ளிக்குச் சென்று வந்த கற்பகம் வீட்டு வேலைகளைப் பார்பதற்காகப் படிப்புக்கு முற்றுப்புள்ளி வைத்தாகிவிட்டது. தந்தையோ தன் புதிய மனைவியின் சொல்லைக்கேட்டு கற்பகத்துக்கு அடிப்பதும், கொடுமைப்படுத்துவதுமாக இருந்தார். சித்தியோ நித்தம் பேச்சும் அடியும். சாப்பாடு கூடச் சரியாகக் கொடுப்பதில்லை.

இந்த நிலையைக் கவனித்து வந்த கற்பகத்தின் தாய்மாமன் பொறுக்கமுடியாமல் கற்பகத்தைக் கூட்டி வந்து தனது வீட்டில் இருக்கச் செய்தார். வீட்டில் தொடர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்திருக்க விரும்பாத மாமனின் மனைவி கணவனுடன் "இது என்ன சத்திரமே" என்று சொல்லி சண்டை பிடிப்பாள். கற்பகம்தான் பாவம் என்ன செய்வாள். தன்னால் மாமாவும் கஷ்டப்படுகின்றாரே என்று எண்ணி வேதனைப்படுவாள்.

மனைவியின் நச்சரிப்புத் தாங்க முடியாமல் கற்பகத்தையும் கூட்டிக்கொண்டு திருகோணமலைக்கு வந்து அன்பு இல்லத்தில் சேர்த்துவிட்டார்.

பன்னிரண்டு வயதில் திருகோணமலைக்கு வந்த கற்பகம் அங்கு சிறந்த முறையில் அன்பு இல்லத்தாரால் பராமரிக்கப்பட்டாள். அங்கிருந்துகொண்டு பாடசாலைக்குப் படிக்கவும் சென்றாள். அன்பு இல்லத்தில் இருந்து வளர்ந்து பருவ வயதை எய்தியபின், துறைமுகத் தொழிலாளியான கோணேசன் என்பவரைக் கரம் பிடித்தாள்.

நாட்கள் நகர்ந்தன. மகனையும் பெற்றெடுத்தாள். அதன் பிறவு கணவனின் நடவடிக்கையில் மாற்றங்கள் தென்பட்டன. தினமும் குடித்துவிட்டு நேரம் பிந்தி வாறதும், வீட்டுச் செலவுக்குப் பணம் கொடுக்காமல் விடுவதும், கற்பகம் ஏதாவது கதைத்தால் அடிப்பதுமாக வாழ்க்கை சக்கரம் உருண்டோடியது.

மகனை வளர்ப்பதற்காகத் தன் உடலை வருத்தவேண்டிய கட்டத்திற்கு வந்த கற்பகம் வீடுகளுக்குச் சென்று மா இடித்துக் கொடுத்து கிடைக்கும் பணத்தில் வாழ்க்கை வண்டியை ஓட்டிக்கொண்டிருந்தாள்.

கோணேசன் ஒழுங்காக வீட்டுக்கே வருவதில்லை. வந்தாலும் ஏதாவது பிரச்சினை இருக்கும். குடிப்பதற்கு காசுதா என்று கற்பகத்தைப் போட்டுஅடிப்பான். பாவம் கற்பகம் இதைச் சமுதாயச் சீர்கேடு என்று நோக்க அவளுக்கு எப்படித் தெரியும்.?

ஒரு நாள் இரவு வேலைக்குப் போன கோணேசன் சுடுபட்டு இறந்த செய்தி கேட்டு பதறிக்கொண்டு ஓடிய கற்பகம் அக் காட்சியைப் பார்த்ததும் மயங்கியே விட்டாள். கற்பகத்தின் நிலைமையும், ஏழு வயதுச் சிறுவன் தகப்பனுக்குக் கொள்ளி வைக்கும் காட்சியும் அந்தக் கிராமத்து மக்களை உறைய வைத்துவிட்டன. கணவனை இழந்த மனைவி;தகப்பனை இழந்த மகன். இவர்களின் எதிர்காலம் கேள்விக் குறியாய் நின்றது.

இப்படிக் கஷ்ட துன்பங்களை அனுபவித்து அனுபவித்து பழக்கப்பட்ட கற்பகம் சோர்ந்து விடவில்லை. எப்பாடுபட்டாவது மகனைப் படிப்பிக்கவேண்டும் என்ற வைராக்கியத்துடன் செயற்பட்டாள்.

வீடுகளுக்குச் சென்று மா இடித்து வறுத்துக் கொடுக்கும் வேலையில் ஈடுபட்டு வந்தாள். சுத்தமான, நேர்மையான வேலையைச்செய்துவந்தமையால் ஊரிலை கற்பகத்திற்கு ஒரு மதிப்பு இருந்தது. சில வேளைகளில் கல்யாண வீட்டுக்காரருக்குப் பலகாரங்களும் சுட்டுக்கொடுத்தும் வந்தாள். தான் உழைத்துப் பெறும் பணத்துடன் வாழ்க்கையை ஓட்டி வந்தாள்.

அதேவேளை மகனின் கல்வி நடவடிக்கைகளையும் அக்கறையோடு கவனித்து வந்தாள்.

இச்சந்தர்ப்பத்தில் கணவனின் ஊழியர் சேமலாப நிதியும் கிடைத்தது. அத் தொகையை வங்கியில் வைப்பு வைத்துக் கிடைக்கும் வட்டியுடன் வாழ்க்கையை ஓட்டிக்கொண்டிருந்தாள். மகனும் வளர்ந்து படித்து பல்கலைக்கழகம் சென்று விஞ்ஞானப் பட்டதாரியாக வெளிவந்தான். ஊரிலுள்ள முதல்தரப் பாடசாலையில் ஆசிரியத் தொழிலும் கிடைத்தது.

தாய் கற்பகம் வாழ்க்கையில் முதல் முறையாக அன்றுதான் சந்தோஷப்பட்டாள்.

பாடசாலையில் அற்புதன் மாஸ்டர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றால் தெரியாத பிள்ளை இருக்கமுடியாது. ஒழுக்கக் கட்டுப்பாட்டுடன் கற்பித்தலில் எல்லோரையும் வசீகரிக்கும் ஆற்றல் கொண்டவராக இருந்தமையால் பலராலும் மதிக்கப்பட்டார். அதிபர், சக ஆசிரியர்கள் மேல் மதிப்பும் மாணவர்கள் மேல் அன்பும் கொண்டிருந்தார். பாடசாலையில் தனது பாட மாணவர்களின் கல்வியில் மிகுந்த அக்கறையுடன் கற்பித்துவந்தார். பாடசாலைக்கு வெளியில் வேறு பாடசாலை மாணவர்களுக்கு ரியூசனும் கொடுத்து வந்தார். கஷ்டமான குடும்பத்துப் பிள்ளைகளுக்கு இலவசமாகவே பாடம் போதித்துவந்தார். இதனால் ஊரில் அற்புதன் மாஸ்டருக்கு ஒரு தனிமதிப்பு இருந்தது. இதனால் அவருக்குப் பெண் கொடுக்கப் பலரும் முன்வந்தனர். பெற்றவள் பெருமைப்பட்டாள்.

"தம்பி காலாகாலத்தில் நான் கண்ணை மூடுவதற்கு முன் அந்த நல்ல காரியத்தைச் செய்து போட்டன் எண்டால் நிம்மதியாகப் போய்ச்சேர்ந்துவிடுவன்."

"என்னம்மா சொல்லுறியள். நீங்கள் ஏன் கண்ணை மூடவேண்டும்? இவ்வளவு காலமும் எனக்காக உடம்பை வருத்தி, ஆறுதலின்றி, நிம்மதியின்றி, எவ்வளவு கஷ்டங்களுடன் எதிர்நீச்சல்போட்டு என்னை வாழவைத்த தெய்வமல்லவா நீங்கள்? இனியாவது உங்களை ஆறுதலாக வைத்துப் பார்க்கவேண்டும் என்ற எனது ஆசையை நிறைவேற்ற எனக்குக் கிடைத்த ஒரு சந்தர்ப்பமாகக் கொண்டு நீங்கள் இருக்கும்வரை உங்களுடன் இருக்க விரும்புகிறேன் அம்மா"

"காலகாலத்தில் நடக்கவேண்டியதை தானே தம்பி நான் சொலுகிறன். எனக்கும் பேரப்பிள்ளையளை பார்க்க ஆசையிருக்காதே? நீ ராசா கலியாணம் முடிச்சாலும் நானும் உன்னோடதானே இருப்பன். என்ர ராசாவல்லே. அம்மாவின்ர சொல்லைக் கேள் ஐயா."

கல்யாணம் முடிப்பதை விரும்பாத போதிலும் தாயின் வற்புறுத்தலால் அற்புதனின் மனமும் மாற்றப்பட்டுவிட்டது. பாடசாலை அதிபரின் மருமகளைத் திருமணம் செய்து வாழ்க்கையை நடத்த ஆரம்பித்து ஐந்து வருடங்கள் ஓடி மறைந்துவிட்டன. கற்பகம் ஆனந்தந்துடன் மகன், மருமகள், பேரப்பிள்ளைகளுடன் வாழ்ந்து கொண்டிருந்தார்.

வாழ்க்கையில் இப்படி பேரிடி வரும் என்று அவர் எதிர்பார்த்திருக்கவில்லை. அது தான் மகன் குடும்பம் தன்னைத் தனியாக விட்டு விட்டு கனடாவுக்குப் போகப் போகும் நிகழ்வு. நினைத்துப் பார்க்கவே அவளுக்கு நெஞ்சு வெடித்துவிடும் போலிருந்தது. தனிமையில் இருந்து கவலையால் பல நாள்கள் அழுதிருப்பாள். தன் கவலையை வெளிக்காட்டாமல் மகனுக்கு ஆறுதல் கூறி மருமகளின் விருப்பப்படி கனடாவுக்குப் போவது நல்லது என்று எடுத்துரைக்கின்றாள். தன்னைப் பிரிந்து செல்ல மகன் விரும்பவில்லை என்று தெரிந்திருந்தும் மகனை வற்புறுத்தி அனுப்பிவைக்க நாட்டு நிலைமையைத் தனக்குத் சாதகமாகப் பயன்படுத்துகின்றாள். அற்புதனும் தாய் சொல் தட்டாத தனையனல்லவா?

● ● ●

கனடாவுக்குப் போவதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ள கொழும்புக்குப் போக வேண்டும். அதற்கான திகதியும் குறித்தாகிவிட்டது.

பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள் மாஸ்டர் வீட்டுக்கு வந்துவிட்டார்கள்.

"மாஸ்டர் உங்களை நம்பித்தான் எங்கடை பிள்ளைகள் படிக்கிறார்கள். அவர்களை நடுவழியிலை விட்டுவிட்டு எப்படி வெளியாட்டுக்குப் போகந் துணிந்தீர்கள்? ஒவ்வொரு முறையும் உங்களிட்ட படித்த பத்து பன்னிரண்டு பிள்ளைகள் மெடிசினுக்கு எடுபட்டு பல்கலைக்கழகம் போகுதுகள். உங்கள் அக்கறையும் கவனிப்பும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பித்தல் முறையும் பிள்ளைகளுக்குக் கல்வியில் உற்சாகத்தைக் கொடுத்து அவர் களை மேல் நிலைக்கு உயர்த்தியுள்ளது. உங்களிடம் படித்த எத்தனையோ பிள்ளை கள் டாக்டர்களாக இருக்கின்றார்கள். அவர்கள் உங்களை மதிக்கின்றார்கள். நாங்களும் எங்கள் பிள்ளைகளும் இந்த நாட்டில் உங்கள் சேவை தொடரவேண்டும் என்று விரும்புகின்றோம். இந்நாட்டிலை குறிப்பாக எங்கள் ஊரிலை உங்களுக்குக் கிடைக்கின்ற கௌரவம் மரியாதை நீங்கள் போகும் நாட்டில் கிடைக்குமா? நாட்டுப் பிரச்சினை எண்டு தப்பிக்கலாமா? நாங்களும் எங்கள் பிள்ளைகளும் இந் நாட்டிலதானே இருக்கிறம்: வாழப்போறம்: உங்களைப் போன்ற சேவை மனப்பான்மை உள்ள ஆசிரியர்களால் தான் பாட சாலைக்கு மதிப்பு, தயவு செய்து உங்கள் தீர்மானத்தை மாற்றிக் கொண்டு இங்கேயே இருங் கள்"

பிள்ளைகள் பலர் விம்மி அழத் தொடங்கிவிட்டார்கள்.

அற்புதன் மாஸ்டரின் கண்களும் கலங்கிவிட்டன. ஒன்றுமே பேசாது மௌனமானார். இந்தச் சம்பவத்திற்குப் பின் கொழும்புக்குப் போவதைச் சற்றுத் தாமதிக்கலாம் என எண்ணினார். இருந்தும் மனைவி சுமதியின் நச்சரிப்புத் தாங்க முடியவில்லை. நீங்கள் வராவிட்டால் நான் தற்கொலை செய்வன் என்ற மிரட்டியும் பார்த்தாள். அற்புதன் அசைவதாகத் தெரியவில்லை.

இந்த நாடகங்களைப் பார்த்துக் கொண்டிருந்த கற்பம் மனக்குமுறல்களை அடக்கிக் கொண்டு மகன் அற்புதனைப் பெரிதும் வற்புறுத்தி கனடாவுக்கு போகும்படி கூறுகின்றார்.

அந்நாளும் வந்தது....

அற்புதன் கண்ணீருடன் தாயிடமிருந்து விடைபெற்றுக் கொண்டு வாசலுக்கு வந்தவன். தன் தாயை ஒருமுறை திரும்பிப் பார்கிறான். தாய் விழுந்து கிடக்கின்றார்.

"அம்மா" என்று அழைத்தபடி தாயிடம் ஓடி வருகின்றான். தாயைத் தூக்க முயல்கின்றான். தூக்க முடியவில்லை. அவள் இறந்துவிட்டாள் என்று தெரிந்ததும் கதறி அழுகிறான்.

வானமும் சோகம் தாங்காது சோ என்று மழையைக் கொட்டிக்கொண்டி ருந்தது.

சுமதி செய்வதறியாது மழையில் நனைந்து கொண்டு நிற்கிறாள்.

●





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூற்றாண்டு வரலாறு கண்ட யா/ இராமநாதன் கல்லூரி



சேர் பொன் இராமநாதன் அவர்களால் சைவசமயத்தையும் தமிழர் பண்பாட்டையும் பேணிக் காக்க, பெண்களுக்கான கல்வி அறிவை முன்னேற்ற. கலாசாரத்தை சீரியமுறையில் கடைப்பிடிக்க பெண்களுக்கான தனியான கல்விக் கூடம் நிறுவப்பட்டது. 1913 ஆம் ஆண்டு தை மாதம் 20ஆம் திகதி முதல் மருதனார் மடத்தில் இராமநாதன் கல்லூரி இயங்கத் தொடங்கியது. யாழ்ப்பாணத்தில் முதற் தரமான கல்லூரியாக பெருமையுடன் விளங்கியது. இந்தக் கல்லூரியிலே அயல் கிராமத்துப் பிள் ளைகளே பெரும்பாலும் கல்வி கற்றனர். வெளியிடத்துப் பிள்ளைகள் விடுதியில் தங்கியிருந்த கல்வியை மேற்கொண்டனர். அது ஒரு பொன்னான காலமாக இருந்தது.

சைவப்பிள்ளைகள் வணக்கம் செலுத்துவதற்காக கல்லூரி வளாகத்துக்குள் சிவன் கோயில் ஒன்றையம் சேர் பொன் இராமநாதன் அமைத்திருந்தார். சைவ மரபில் கல்வி கற்கக்கூடிய வகையில் கல்விக் கூடம் ஒன்றை நிறுவவேண்டும் என்ற எண்ணம் சேர் பொன் இராமநாதன் அவர்களுக்கு ஏற்பட்டமை யாழ்ப்பாணப் பெண்களின் கல்வி மேம்பாட்டின் முக்கிய படியாகும். முதலில் இக்கல்லூரியை கோப்பாயில் தாபிக்க எண்ணி அங்கு 25 ஏக்கர் நிலத்தை வாங்கினார். பின்னர் அவரிடம் கோப்பாயிலும் பார்க்க மருதனார்மடம் பொருத்தமானது என்று பலர் எடுத்துக் கூறியதும், அங்கு 15 ஏக்கர் நிலத்தை வாங்கினார். மருதனார்மடத்தில் பெண்கள கல்லூரியைத் தாபிப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்ட வேளை, உடுவில் பெண்கள் பாடசாலைக்கு அணித்தாக இப்பாடசாலை அமைவது கிறிஸ்தவக் கல்லூரிக்குப் பங்கம் ஏற்படுத்தலாம் என்ற கருத்து முன்வைக்கப்பட்டது. அது ஆங்கிலேயர் ஆட்சி நிலவிய காலம் என்பதும் கவனத்துக்குரியது.

இவ்விடயம் குறித்து இராமநாதன் அவர்கள் மிக ஆணித்தரமான வகையில் 1910ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10ஆம் திகதி வணஸ்கொட் பாதிரியாருக்கு கடிதம் அனுப்பியிருந்தார்.

அக்கடிதத்தில் சைவப் பெண்கள் கல்லூரியின் அவசியத்தைச் சுட்டிக்காட்டி, "கிறிஸ்தவப் பிள்ளைகள் கிறிஸ்தவ பாடசாலைகளில் படிப்பது எவ்வளவு அவசியமோ அவ்வளவு அவசியம் சைவப்பிள்ளைகள் சைவப் பள்ளிக்கூடத்திற் படிப்பது" என்று குறிப்பிட்டிருந்தார். 1913 ஆம் ஆண்டு அயராத முயற்சியினால் இராமநாதன் கல்லூரி தனது கல்விப் பணியை ஆரம்பித்தது. சைவத் தமிழ்ப் பெண்களுக்கான கல்லூரியாக அது வரலாற்றில் பதிவானது. சமயப் பண்பும், அறநெறியும், அறிவுத்திறனும் ஒன்றிணைந்த மகளிர் மூலமே தமிழ்நெறி மரபையும், சைவநெறி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரபையும் இணைதது வளர்ச்சிப் பாதையில் முன்னெடுக்க முடியும் என்று கருதினார்.

இதன் காரணமாக யாழ்ப்பாணத்து சைவத் தமிழ் பெற்றோர்கள் தமது பெண் பிள்ளைகளுக்கு ஒழுக்கமும் பாதுகாப்பும் கிடைக்கும் என நம்பி தமது பிள்ளைகளை இராமநாதன் கல்லூரியில் சேர்த்தனர். இது வரலாற்றில் இடம்பெற்ற மகத்தான முன்னேற்றமாகும்.

எதிர்பார்த்த எண்ணங்கள் செயலுருவம் பெற இராமநாதன் கல்லூரி செயற்பட ஆரம்பித்தது. 07.02.1913 அன்று வெளிவந்த 'இந்து ஓகன்' பத்திரிகையில், இராமநாதன் கல்லூரியின் ஆரம்பம் பற்றிக் குறிப்பிடுகையில் "இக்கல்லூரியின் ஆரம்பம், தமிழர் வரலாற்றில் புதிய சகாப்தத்தை உருவாக்கும். இலங்கை இந்து மக்கள் தம் வாழ்வில் என்றும் நினைவிலிருத்தும் தினம்" என்று தெரிவித்திருந்தது.

யாழ்ப்பாணப் பெண்களின் கல்வி வளர்ச்சியில் முக்கிய பங்களிப்பினைச் செய்த சேர் பொன் இராமநாதன் அவர்கள் இந்துப் பெண்களின் கல்வி பற்றி பேசப்பட்ட ஒரு சந்தர்ப்பத்தில் ஆங்கிலக் கல்வியின் முக்கியத்துவம் பற்றியும் எடுத்துக் கூறியிருந்தார். அதன்படி சைவசமயம், தமிழ் மொழி ஆகியவற்றுடன் ஆங்கிலக் கல்வியையும் இராமநாதன் கல்லூரியில் போதித்தனர். பாடசாலைகள் தேசியமயமாக்கப்பட்டு தாய்மொழிக் கல்வி முக்கியத்துவம் பெறும்வரை யாழ்ப்பாணத்திலுள்ள கல்லூரிகள் எல்லாம் ஆங்கிலக் கல்வியையே போதித்துவந்துள்ளன.

இராமநாதன் கல்லூரியில் கல்வி பயிலும் மாணவிகள் அக்காலம் முதல் தூய வெள்ளை நிற ஆடைகளையே அணிந்து பாடசாலைக்குச் சென்று வந்தனர். சிறுபிள்ளைகள் பாவாடை சட்டையும், பருவமடைந்த பிள்ளைகள் பாவாடை சட்டையுடன் அரைத்தாவணி போட்டும், பெரிய வகுப்புப் பிள்ளைகள் வெள்ளை சேலை கட்டியும் தமிழர் தம் கலாசாரத்தைப் பேணி ஒழுக்கக் கட்டுப்பாட்டுடன் கல்வியை மேற்கொண்டனர். 1980கள் வரை உன்னதமான நிலையில் இயங்கி வந்த இராமநாதன் கல்லூரி யுத்தக் கெடுபிடிகளாலும், பிள்ளைகள் பாடசாலையை விட்டு வேறு பாடசாலைகளுக்குச் சென்றதாலும் பின்னடைவைச் சந்திக்க நேர்ந்தது.

நீண்ட இடைவெளிக்குப் பின் மீண்டும் பழைய நிலைக்குக் கட்டியெழுப்பவேண்டிய பாரிய பொறுப்பு கல்விச் சமூகத்திற்கு உண்டு. பழைய கட்டடங்களுக்குப் பதிலாகப் புதிய கட்டங்கள் அமைத்தல், பௌதீக வளங்களை மேம்படுத்தல் மற்றும் வளப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்தல், கற்றல், விளையாட்டு உபகரணங்கள் என்ற தேவைகள் அதிகரித்துள்ளன. பெற்றோர், ஆசிரியர், சமூகம் இணைந்து மாணவர்களின் கல்வி முன்னேற்றத்தில் அக்கறையுடன் செயற்படவேண்டும். முக்கியமாகப் பழைய மாணவர்கள் கூடிய கவனம்செலுத்த வேண்டிய காலகட்டம் உதயமாயிருக்கிறது.

இணுவிலைச் சேர்ந்தவரும் இராமநாதன் கல்லூரியின் பழைய மாணவியும் ஆற்றல் மிக்க கல்வியாளருமாகிய திருமதி கமலராணி கிருஸ்ணபிள்ளை புதிய அதிபராகப் பொறுப்பேற்று பாடசாலையைச் சிறந்த முறையில் கொண்டு நடத்துகின்றார். ஆகவே நாமும் பாடசாலையின் அபிவிருத்தியில் அக்கறையுடன் செயற்பட்டு கல்லூரியின் முன்னேற்றத்துக்காக இந்நூற்றாண்டு காலத்தில் உழைக்கத் திட சங்கற்பத்துடன் உறுதிபூணுவோம். வெளிநாடுகளில் வாழுகின்ற எம் உறவுகளும் இக்கல்விப் பணிக்கு உதவமுன்வர வேண்டும்.

**- இணுவிலான்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'இணுவில் ஒலி" பொங்கல் மலர் வெளியீட்டு விழா










'இணுவில் ஒலி' பொங்கல் மலரின் வெளியீட்டு விழா இணுவில்பொது நூலக மண்டபத்தில் நூலகத் தலைவர் திரு.ம. ஜெயகாந்தன் தலைமையில் நடைபெற்றது. பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைத் சிரேஷ்ட விரிவுரையாளர் திரு.ஈ.குமரன் வருகை தந்து சிறப்பித்தார். பேராசிரியர் க. தேவராசா வாழ்த்துரை வழங்குவதையும் மேடையில் திரு. ம. ஜெயகாந்தன், சிவஸ்ரீ வை. சோமாஸ்கந்தக் குருக்கள், திரு.ஈ.குமரன், சஞ்சிகை ஆசிரியர் தம்பு சிவா, திரு. ம.பா.மகாலிங்கசிவம் ஆகியோர் வீற்றிருப்பதையும் அறிமுக உரையை திரு. மா.ந.பரமேஸ்வரன் நிகழ்த்துவதையும், சஞ்சிகை ஆசிரியரிடமிருந்து முதல் பிரதியை செல்வி கிருபாமூர்த்தி பெற்றுக் கொள்வதையும் அருகில் கலாபூஷணம் திருமதி வை. கணேசபிள்ளை இருப்பதையும் மற்றும் வெளியீட்டு விழாவில் கலந்து சிறப்பித்த முக்கியஸ்தர்களையும் படங்களில் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரா.சுந்தரலிங்கம் என்னும் கல்வியியாளர்

**அன்னாரின் ஆறாவது சிரார்த்த தினத்தை (05.04.2013) நினைவு கூர்ந்து இக்கட்டுரை பிரசுரமாகிறது.**



செந்தமிழும் செம்கலையும் கொஞ்சி விளையாடும் இணுவையம்பதியிலே 1935 ஆம் ஆண்டு மே மாதம் பதினைந்தாம் திகதி இராமுப்பிள்ளை சுந்தரலிங்கம் அவர் கள் பிறந்தார்கள். சாதாரண விவசாயக் குடும் பத்தில் பிறந்த இவர் 'முயற்சி திருவினை யாக்கும்' என்ற முதுமொழிக்கு இலக்கண மாக கல்வியிலே கண்ணும் கருத்துமாக இருந்து, ஒரு எடுத்துக்காட்டாகத் திகழ்ந் தார். சிறுவயது முதற்கொண்டு கடவுள் நம்பிக்கை கொண்டவராக அதேவேளை மூடக்கொள்கைகளுக்கு எதிரானவராகவும் வாழ்ந்தார். கல்வியில் நாட்டம் கொண்டு அதன் பால் ஈர்ப்புடன் இருந்தார்.

*"தொட்டனைத்தூறும் மணற்கேணி மாந்தற்கு*
*கற்றனைத்தூறும் அறிவு"*

என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக் குக்கு அமைய கல்வித் தேடலில் பெரும் சாதனை புரிந்துள்ளார். முதலில் தமிழ் மொழியில் கற்று தமிழ் எஸ்.எஸ்.சி.சித்தி யடைந்தார்.

தொடர்ந்து ஆங்கிலத்தில் கல்வி கற்று எஸ்.எஸ்.சி.(S.S.C) பரீட்சையிலும் தேறி னார். மேற்படிப்பை மேற்கொள்வதற்காக இந்தியாவுக்குச் சென்ற இவர் மற்றாஸ் (Madras) பல்கலைக்கழகத்தில் சேர்ந்து ஒரு விஞ்ஞானப் பட்டதாரியாக வெளிவந்தார். மீண்டும் இலங்கைக்குத் திரும்பிய சுந்தர லிங்கம் தனது கல்வித் தேடலை நிறுத்தா மல் தொடர்ந்தார். ஆசிரியராகப் பணி புரிந்துகொண்டு பாளி, சமஸ்கிருதம், தமிழ் ஆகிய பாடங்களைப் பயின்று லண்டன் பல்கலைக்கழக இளமாணி(B.A) பரீட்சை யில் தேறினார். இதன் மூலம் இரண்டு துறைப் பட்டதாரியாக, அறிவாற்றல் மிக்கவ ராக, பல மொழிகள் தெரிந்தவராகத் தன்னை உயர்த்திக் கொண்டார். கொழும்புப் பல்கலைக் கழத்தில் கல்வி டிப் ளோமா (Diploma in Education) கற்கை நெறியை மேற்கொண்டு அதில் சித்திய டைந்தார். இதன் பெறுபேற்றின் அடிப்ப டையில் தங்கப்பதக்கம் பெற்றார். யாழ்ப் பாணப் பல்கலைக்கழகத்தில் எம்.ஏ.(M.A) பாடநெறியை மேற்கொண்டார். மேலும் ஆரிய திராவிட பாஷா அபிவிருத்தி நிறு வனத்தின் பரீட்சையில் சித்திடைந்து தமிழ்ப் பண்டிதராக வெளிவந்தார். அத்து டன் கலைகளின் மேல் இருந்த பற்றுதல் காரணமாக சென்கை கலாசேஷ்திரா (Chennai Kalashesthira) வின் நடன டிப்ளோமா (Diploma in Dance) பெற்றார்.

எல்லோருடனும் புன்சிரிப்புடன் பழகும் சுபாவம் கொண்டவராகிய திரு.சுந்தரலிங் கம் நகைச்சுவையாகப் பேசும் வல்லமை கொண்டவர். ஆழமான, கருத்து நிறைந்த சொல்வளத்தால் எல்லோரையும் கவரக் கூடியவராக உரையாடுவார். பேசும் போது பழமொழிகள், உவமைகள், உதாரணங்க ளுடன் பேசும் பாங்கு எல்லோரையும் ஈர்த்து நிற்கும். மேலும் தான் கொண்ட கருத்தை ஆணித்தரமாக நிலைநிறுத்து வதில் வல்லவராக இருந்தார். பகிடிகள் சொல்லிக் கதைத்து மற்றவர்களையும் சிரிக்கவைத்து தானும் சிரிப்பார். அவரின் தனித்துவம் மொழி நடையின் சிறப்பு என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லாம். கலை ஆர்வமும் இலக்கிய ஆர்வமும் மிக்கவர். மரபுக் கவிதைகளை வாசித்து ரசிப்பார். மொழி, இலக்கியம், கலை ஆகிய பல்வகைப் பரிமாணங்களுடன் நடமாடும் ஒரு பல்கலைக்கழகமாக உயர்ந்து நின்றார். மனித நேயம் கொண்ட ஒரு கல்வியாளனாக அவர் கல்விச் சேவைக்கு ஆற்றிய பணிகள் அளப்பரியன. அதனால் இலங்கையின் கல்வி உலகத்தில் பலராலும் பேசப்பட்ட ஒரு மதிப்புக்குரியவராக நிமிர்ந்து நின்றார். கிராமப்புறப் பாடசாலைகளின் வளர்ச்சியில் அவர் கொண்டிருந்த அக்கறை, ஈடுபாடு காரணமாக பலர் மனங்களில் அவர் வீற்றிருக்கின்றார்.

கல்வித்துறையில் அவர் வகித்த பதவிகள் பல. கொழும்புப் பரீட்சைத் திணைக்களத்தின் பிரதி ஆணையாளராக பதினாறு வருடங்கள் கடமையாற்றியுள்ளார். அதைத் தொடர்ந்து பத்து வருடங்கள் வடமாநில கல்விப் பணிப்பாளராகச் செயலாற்றினார். மஹரகம தேசிய கல்வி நிறுவகத்தின் ஆலோசகராக மூன்று வருடங்கள் கடமையாற்றியுள்ளார். வடக்கு, கிழக்கு மாகாண பரீட்சைகள் ஆணையாளராக நான்கு வருடங்கள் பணியாற்றியுள்ளார். தேசிய தொகையீட்டு நிகழ்ச்சித் திட்ட அலகின் (National Integration programme Unit-Chief Co-ordinatior) பிரதம இணைப்பாளராகவும் இருந்துள்ளார்.

திரு.சுந்தரலிங்கத்தின் பொதுப்பணி பரந்துபட்டது. கொழும்புத் தமிழ்ச்சங்கத்தில் தலைவராக இருந்து பணியாற்றியுள்ளார். உலக இந்துக் கவுன்சிலின் கொழும்புக் கிளை நிர்வாக சபை உறுப்பினராகவும் அகில இலங்கை இந்துக் காங்கிரசின் நிர்வாக சபை உறுப்பினராகவும் பதவி வகித்துள்ளார். SLAAED அங்கத்தவராகவும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கவுன்சில் உறுப்பினராகவும் இருந்துள்ளார். பொதுப் பணிகளில் தன்னை ஈடுபடுத்தி உழைத்து வந்தார். இதனால் பலருடைய அறிமுகம் கிடைக்கப் பெற்றது. "நல்லோரைக் காண்பதுவும் நன்றே" என்ற முதுமொழிக்கு அமைய அவருடன் நட்புப் பாராட்டுவதில் பலர் ஆர்வம் கொண்டிருந்தனர். அவர் எல்லோராலும் விரும்பப்பட்ட ஒரு நேசமுள்ள மனிதனாக வாழ்ந்து காட்டினார்.

தான் பிறந்து, வளர்ந்து, உலாவிய இணுவில் என்ற கிராம மண்ணின் மைந்தன் அக்கிராமத்தின் மேல் கொண்ட காதலால் கல்வி மேம்பாட்டிற்கு பெரும் பணி ஆற்றியுள்ளார். இணுவில் ஒரு பெரிய விவசாயக் கிராமம். அங்கு பிறந்த பிள்ளைகள் இடைநிலைக் கல்வியைத் தொடர்வதற்கு வெளி ஊர்களிலுள்ள பெரிய பாடசாலைகளுக்கே சென்று கல்வி பயில வேண்டிய கட்டாயம் பல ஆண்டு காலமாக இருந்து வந்தது. இக்குறையை எவருமே தீர்த்துவைக்க முன்வரவில்லை. இக்காலகட்டத்தில் கல்விப் பணிப்பாளராக இருந்த திரு. இரா.சுந்தரலிங்கம் தனது மேலான பணிகளுக்கு மத்தியிலும் அயராத உழைப்புக் காரணமாக இரண்டு கல்லூரிகளை இணுவில் கிராமத்தில் தரம் உயர்த்தினார். இணுவில் மத்திய கல்லூரி, இணுவில் இந்துக் கல்லூரி என நாமம் கொண்டு கிட்டத்தட்ட 4000 பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்கு அவை பணியாற்றுகின்றன. இணுவில் மாணவர்களின் காலத்தின் கல்வித் தேவையறிந்து செயற்பட்ட கல்வியாளனாக, பொது நலத் தொண்டனாகப் போற்றப்படுகின்றார். இத்தகைய பெரியார் தனது 72 ஆவது வயதில் 05.04.2007 அன்று காலமாகிய செய்தி பலரை அதிர்ச்சிக்குள்ளாக்கியதுடன் சொல்லணா வேதனையையும் கொடுத்தது என்பதைப் பலரும் இன்று ஞாபகப் படுத்திக் கொண்டே இருக்கின்றார்கள். இணுவில் மைந்தன் திரு. இரா.சுந்தரலிங்கம் என்றும் பேசப்படுவார்.

**தம்பு சிவசுப்பிரமணியம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்க இலக்கியங்கள் சுட்டும் தந்தி வாத்தியங்கள்



மனித வாழ்க்கையில் முக்கிய பங்கினை வகிக்கும் இசை மனிதன் மட்டு மன்றி அனைத்து உயிரினங்களையும் உணர்ச்சி யடையச் செய்யும் தன்மை வாய்ந்தது. இன்பத்திலும் துன்பத்திலும் உள்ளத்தில் இருக்கும் உணர்ச்சிகளை வெளிப்படுத் தும் சக்தி இசைக்குண்டு. இசையை மக் கள் தாம் வாழும் இயல்புக்குத் தக்கவாறும், சூழலுக்கேற்றவாறும் வாழ்க்கை முறைக் கேற்பவும் இசை மரபுகளை ஏற்படுத்தியுள் ளனர். அதற்கேற்ப இசை யமைப்பு, இசைக் கருவிகள், இசைக்கும் முறை. இசைச் சூழல் இடத்திற்கு இடம் மாறுபட்டிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே தமிழகத்தில் பாணன், பறையன், துடியன் முதலிய இனத்தவர்கள் தோன்றிவிட்ட னர். பாணர்கள் யாழ். வாசிப்பதில் சிறந்த வர்கள் ஆதலால் இவர்களுக்கு யாழ்ப்பா ணர் என்ற பெயர் எழுந்தது என்று கூறுவதி லிருந்து தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே பாணர்களும், பாடினிகளும் தோன்றிவிட்டனர் என்று நன்கறியலாம்.

தொல்காப்பியம் சங்க இலக்கியங்க ளில் இருந்து கிடைக்கும் செய்திகள் மூலம் அக்காலத் தமிழிசை முறை பற்றி அறிய லாம். ஏழிசைப் பகுப்பு, பண்ணமைப்பு, கருவியிசை முதலியன பற்றி சங்க இலக் கியங்கள் உறுதிப்படுத்திக் காட்டுகின்றன. பழந்தமிழ் மக்கள் ஸ்வரங்களையும் சுருதி களையும், இராகம் பாடும் முறைகளையும் உணர்ந்து 12000 இராகங்களைப் பாடி வந்தனர் என்றும் இவ் இராகங்களில் பல இப்போது வேற்றுமொழிப் பெயர்களைச் சூடிக் கொண்டு உலாவருகின்றன. இது தமிழி சையின் உயர்வுக்கு தனிச்சிறப்பு. இத்தகைய தமிழிசை என்று கூறவேண்டிய நிலையில், பிற இசைகளுடன் கலந்து அவற்றைத் தழுவிக் காணப்படுகிறது.

தொல்காப்பியம், சங்க இலக்கியம். பதினெண்கீழ்கணக்கு நூல்கள், சிலப்பதி காரம் முதல் கம்பராமாயணம் வரையுள்ள காப்பியங்கள், தேவாரம், திருவாசகம், நாலாயிரத் திவ்யபிரபந்தம்,பெரிய புரா ணம் முதலிய பக்தி இலக்கியங்கள் வரைத் தமிழிசைப் பண்களே தமிழ் வானில் ஒலித் துக் கொண்டிருந்தன.

தொல்காப்பியர் காலத்தில் இசை வாணர்கள் பற்றிய குறிப்புக்களை அறிய முடியாத போதும் பரத்தையின் பிரிவு கார ணமாகப் பாணர், பாடினி, உத்தர், விரலியர் போன்றோர் ஊடல் தீர்க்கும் வாயிலாக அனுப்பும் மரபு கூறப்படுகிறது. இப்பாணர், உத்தன், பாடினி, விறலி ஆகியோர் இசை யிலும், கூத்திலும் சிறந்தவர்கள் என்பதை பண்டைய இலக்கியங்கள் சுட்டுகின்றன.

தொல்காப்பியர் நிலங்களின் கருப் பொருளாகப் பலவற்றை குறிப்பிடுகின் றனர்.

**"தெய்வ முணாவே மாமரம் புட்பறை**
**செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ**
**இவ்வகை பிறவும் கருவென மொழிப"**

இப்பாடலில் தாளக் கருவி ஆகிய பறை யும், பண்ணிசைக் கருவியாகிய யாழ் பற்றி யும், அவை பயன்படுத்தும் முறை பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது–

- குறிஞ்சிக்குத் தொண்டகப் பறையும், குறுஞ்சி யாழும்
- பாலைக்குத் துடியும், பாலை யாழும்
- முல்லைக்கு ஏறுகோட் பறையும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முல்லை யாழும்

- மருதத்திற்கு நெல்லரிகிணையும் மணமுழவும்
- நெய்தலுக்கு மீன்கோட் பறையும், நாவாய்ப் பம்பையும் விளரியாழும்

பயன்பட்டன.

சங்க காலத்தில் இசை மிகவும் சிறந்த இடத்தினை வகித்துள்ளது. அக்காலத்தில் பாணர், பாடினியர், ஆடல்மகளிர் போன்றோர் பாடல்களைப் பாடி மன்னரையும் மக்களையும் மகிழ்வித்துள்ளனர். இக் கலைஞர்களில் பெரும்பாலானோர் ஆடலும், பாடலும் தெரிந்தவர்களாக இருந்தனர். அக்கால இசையை வளர்த்தவர்கள் பாணர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

### பாணர்

சங்க கால இசைக் கலைஞர்களில் பாணர் மிகச் சிறந்த இடத்தைப் பெறுகின்றனர். பாணரில் இசைப் பாணர், யாழ்ப் பாணர், மண்டைப் பாணர் எனப் பல பிரிவினர் இருந்தனர். இவர்களில் யாழ் வாசிப்பதில் சிறந்தவர்கள் யாழ்ப்பாணர் என அழைக்கப்பட்டனர். இசைக் கலைஞர் என்ற சிறப்பைப் பெற்ற பாணர்கள் யாழிசைத்துப் பாடுவதில் சிறந்தவர்கள். யாழிசைப்பது போன்று பாட்டிசைப்பதிலும் இவர்கள் சிறந்தவர்கள். பேரியாழ், சீறியாழ் ஆகிய இரண்டையும் இசைக்கும் பாணர்களில், பெரும்பாணாற்றுப்படை பேரியாழ்பாணரைப் பற்றியும், சிறு பாணாற்றுப்படை சீறியாழ் பாணரைப் பற்றியும் விளங்குகின்றன. சிறந்த இசைத் திறனுடைய கலைஞர்களாக விளங்கிய பாணர்கள் மிகவும் வறிய நிலையில் இருந்தவர்கள் என்பதை ஆற்றுப்படைப் பாடல்கள் மூலம் அறியலாம். இசையில் நாட்டமுள்ள வள்ளல்கள் இவர்களை ஆதரித்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. மங்கலப் பொருளாகக் கருதப்பட்ட யாழை பாணர் மாலை சூட்டி, அதனை கருமை நிறமுடைய பைக்குள் வைத்துப் பாதுகாத்தனர்.

பாணர்களின் ஆண்களை, சென்னியர், உயிரியர், செபரியர், மதங்கர், இசைக்காரர், பாணர் எனப் பிங்கல நிகண்டும் பெண்களை பாடினி, விறலி, பாட்டி, மதங்கி, பாணர், மகள் எனத் திவாகரமும் கூறுகின்றன. இசையில் சிறந்தவர்களாகிய பாணர்கள், பாடினிகள், கூத்தர்கள், யாழ் மீட்டிப் பாடியும் ஆடியும் அரசனைப் புகழ்ந்தும், மகிழ்ந்தும் அரசனிடமிருந்து பரிசில்களை யும் பட்டங்களையும் பெற்றனர்.

பாணர்கள் யாழ் மீட்பு இசையில் சிறந்தவர் என்பதற்கு எடுத்துக்காட்டாக திருநீல கண்ட யாழ்ப்பாணர், திருப்பாணாழ்வார், பாணபத்திரர், மதங்க சூளாமணியார் போன்றோரைக் குறிப்பிடலாம்.

மன்னர்கள் போருக்குச் செல்லும் போதும் போரில் வென்று வெற்றியுடன் திரும்பும் போதும் பாணர் அவர்களைப் பாடல்களால் மகிழ்வித்தனர்.

### யாழ்

சங்க காலத்தில் இசையுலகில் யாழ் மிகவும் சிறந்த இடத்தினை வகித்துள்ளது. நரம்புக்கருவிகளில் சிறந்ததான யாழ் இனிமையான நாதத்தையுடையது. அக் காலத்தில் வாய்ப்பாட்டு நிகழ்ச்சிகளை இனிமையூட்டி சிறப்பிப்பதற்கு இவ்விசைக் கருவி பயன் படுத்தப்பட்டுள்ளது. பழந்தமிழ் மக்கள் யாழைக் கொண்டு இசைக்கும் இலக்கணம் வகுத்ததன் காரணததால் ஸவரங்களை நரம்புகள் என்றும் பண்களை யாழ். என்றும் அழைத்தனர். இதன் காரணமாக நான்கு பண்களும் முறையே பாலை யாழ், மருதயாழ், நெய்தல் யாழ்., குறிஞ்சி யாழ் என அழைக்கப்பட்டன.

ஆதி காலத்தில் வேட்டையாடித் திரிந்த மனிதன் விலங்குகளைக் கொல்வதற்கு காட்டிற்குச் சென்று அம்பை எய்தபொழுது அதன் நாணிலிருந்து எழும்பிய இனிமையான நாதத்தை அனுபவித்தான். இதுவே வில்யாழ் தோன்றுவதற்கு காரணமாயிருந்திருக்கலாம்.

PUBLIC LIBRARY JAFFNA



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில் யாழ்

இவ்விசைக்கருவியே முதன்முதலாகத் தோன்றியது எனக் கருதப்படுகிறது. முல்லை நிலத்தில் வாழ்ந்த மக்கள் வில் யாழ் எனும் இசைக்கருவியை உருவாக்கினர். வேடன் தனது வில்லில் வெவ்வேறு நீளத்தையுடைய நாண்களைக் கட்டி மீட்டிய பொழுது அதிலிருந்து பலவித இனிமையான ஸ்வரங்கள் ஒலிப்பதைக் கவனித்தான். இதுவே யாழின் வளர்ச்சிக்குக் காரணமாய் இருந்தது. இத்தகைய கருவிகளுக்கு ஆரம்பத்தில் மெல்லிய கயிறு பயன்படுத்தப்பட்டன. நாளடைவில் கயிற்றுக்குப் பதிலாக நரம்புகள் இடம் பெற்றன.

இவ்வாறாகத் தமிழ் இலக்கியங்களின் ஆரம்ப காலமாக கருதப்படுகின்ற சங்க காலத்தில் கருவியிசையும் அவற்றுள் ஒரு வகையான தந்தி வாத்தியங்களின் சிறப்பும் அவை கையாள்பவரின் வகுப்பும் அவற்றின் வகைகள் பற்றியும் “சங்க இலக்கியங்கள் சுட்டும் தந்தி வாத்தியங்கள்” எனும் கட்டுரை நோக்குகின்றது.

**செல்வி தனுஷா குணபாலசிங்கம்**
(B.F.A.) ஆசிரியர்

---

# தோல்வி என்பது தோல்வி அல்ல!

செயல்களைக் செய்வதானது தன்னம்பிக்கையை அளிக்கும். ஆரம்பத்தில் நீங்கள் தோல்வி அடைந்தாலும் பராவாயில்லை. உங்கள் குறைகளைத் திருத்திக் கொண்டு அடுத்தமுறை நீங்கள் வெற்றியடையலாம். நாற்காலியில் அமர்ந்துகொண்டு கவலைப்படுவதால் எதுவும் நிகழப்போவதில்லை. அது உங்களை ஒரு நம்பிக்கை அற்றவராக ஆக்கிவிடும். சிலர் நல்லகாரியங்களைச் செய்யத் தொடங்கும் போதே மன உறுதி குலைத்து நம்பிக்கை இழக்கின்றனர். அதனால் விக்கினங்கள் உண்டாகின்றன. எந்த நல்ல காரியம் செய்யும் பொழுதும் விக்கினங்கள் ஏற்படுவது இயற்கையே. காரியம் செய்பவருடைய மன உறுதியைச் சோதிப்பதற்காகவே அவை வருகின்றன. அவரது நம்பிக்கை, உறுதி மற்றும் மனத் தூய்மையைச் சோதிக்கவே அவை வருகின்றன. ஏதாவது உருப்படியாகச் செய்யவேண்டும் என்று உங்களது உறுதி அதிகரிக்கின்ற அளவு எதிரிடை சக்திகளும் பலமடையும். அதைக் கண்டு மனம் தளரவேண்டாம். அதற்கு மசிய வேண்டாம். உங்களிடம் நம்பிக்கை கொண்டு அந்த இடுக்கண்களை வெல்லுங்கள். சோதனைகளையும் இடுக்கண்களையும் எதிர்கொள்ளாமல் எந்தத் துறையிலும் உங்களால் வெற்றியை அடைய முடியாது என்பதைத் தெரிந்துகொள்ளுங்கள்

– சுவாமி சிவானந்தா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசு வழங்கிய கலாபூஷணம் விருது

பல் சீரும் பெற்ற இணுவில் திருவூர் ஏனைய இடங்களை விடச் சிறப்படைந்த பெருமையை இவ்வருடம் கிடைத்த வெகு மதியான "கலாபூஷணம்" என்னும் அரச விருது மூலம் எட்டியுள்ளது.

இலங்கையின் மூவின மக்களிடையே பாரம்பரிய கலைகளிற் சிறந்து விளங்கிய அறுபது வயதைக் கடந்த முதுபெரும் கலைஞர்களை அரசு பாராட்டிக்கௌரவித்துள்ளது.

1984 தொடக்கம் எமது நாட்டில் இலக்கியம், இசை, நடனம், நாடகம், சிற்பம், ஓவியம், ஊடகத்துறை போன்ற பிரிவுகளிற் சிறந்து விளங்கிய கலைஞர்களைப் பாராட்டும் வகையில் அரச கலாசார அமைச்சு "கலாபூஷணம்" என்னும் தேசிய விருது வழங்கிக் கௌரவித்து வருகிறது. இதன் பேறாக இணுவில் மண்ணின் மைந்தர்கள் பலர் சிறப்படைந்தனர்.

01. முதன்முதல் உலகறிந்த பெருங் கலைஞர் மகாவித்துவான் பிரம்மஸ்ரீ ந.வீரமணி ஐயர் இவ்விருதைப் பெற்றுச் சிறப்பித்தார்.

02. தொடர்ந்து புலவர்மணி வை. க.சிற்றம்பலம் - 2002 - இலக்கியத்துறை.

03. கே.ஆர்.சுந்தரமூர்த்தி (நாதஸ்வரம்) - 2006 - இசைத்துறை.

04. உ.இராதாகிருஷ்ணன் - (வயலின்) - இசைத்துறை.

05. K.S.ஆனந்தன் (எழுத்தாக்கம்) - 2010 - இலக்கியத்துறை

06. வி.கே.கானமூர்த்தி (நாதஸ்வரம்) - 2010 - இசைத்துறை.

07. பண்டிதை திருமதி வைகுந்தம் கணேசபிள்ளை - 2011 - இலக்கியத்துறை.

08. கா.வைத்தீஸ்வரன் (உளவளக் கல்வியாளர்) - 2012 - இலக்கியத்துறை.

09. மூ.சிவலிங்கம் (சமய இலக்கிய எழுத்தாக்கம்) - 2012 - இலக்கியத்துறை.

10. உ.பாலகிருஷ்ணன் (நாதஸ்வரம்) - 2012 - இசைத்துறை.

11. தம்பு சிவசுப்பிரமணியம் (எழுத்தாக்கம்) - 2012 - இலக்கியத்துறை.

12. ஏரம்பு சுப்பையா மகள் திருமதி சாந்தினி சிவனேசன் - 2012 - நடனத்துறை.

13. வை.க.சிற்றம்பலம் சிவானந்தராசா - 2012 - இசைத்துறை.

இவ்வருடம் இலங்கை முழுவதும் விருது பெற்ற அறுபது தமிழ்க் கலைஞர்களுள் எமது திருவூர் மண்ணின் மைந்தர்கள் ஆறுபேர் தெரிவுசெய்யப்பட்டமை எமது இணுவை மண்ணுக்குக் கிடைத்த பெரும் பேறாகும். மேற்கூறிய "கலாபூஷணம்" என்னும் அரச விருதுகள் பெற்ற கலைஞர்களைப் பாராட்டுவதுடன் மேலும் பல கலைஞர்கள் தொடர்ந்து பிரகாசிக்க வேண்டுமென இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

**மா.ந.பரமேஸ்வரன்**
இணுவில் இளந்தொண்டர் சபை


**இணுவில் ஒலி - சந்தா விவரம்**

ஒரு வருடச் சந்தா - ரூபா 600 (அஞ்சல் செலவுடன்)
வெளிநாடு - $ 25 (U.S) "

உங்கள் இணுவில் ஒலியின் வளர்ச்சிக்குச் சந்தாதாரர்களாகச் சேர்ந்து ஆதரவு நல்குங்கள்.

தொடர்பு :

| | |
|---|---|
| த.சிவசுப்பிரமணியம் | சி.சரவணபவன் |
| 9-2/1, நெல்சன் பிளேஸ், | காரைக்கால் ஒழுங்கை, |
| கொழும்பு - 06. | இணுவில் கிழக்கு, |
| இலங்கை | சுன்னாகம், இலங்கை. |
| தொ.இல. 071 8676482 | தொ.இல. 077 3126802 |

**வங்கிக் கணக்கு விவரம்:**

வங்கி/Bank : Commercial Bank - Wellawatte
A/C No: 8100086490




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிந்தவையும் தெரிந்தவையும்

★ வடக்கு, கிழக்கில் யுத்தம் முடிவடைந்த பின்னரும் கூட அதிகளவான மாணவர்கள் பாடசாலையிலிருந்து இடைவிலகுவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

2011 இல் இலங்கை முழுவதும் 126,000 வரையான மாணவர்கள் பாடசாலைக் கல்வியிலிருந்து இடைவிலகியதாக, மதிப்பீடுகள் சுட்டிக்காட்டுகின்றன. இவ்வாறு இடைவிலகிய மாணவர்களில் அதிகம் பேர் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் என்பது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

2011 இல் இலங்கையில் வடமாகாணத்தைச் சேர்ந்த 38,321 மாணவர்கள் பாடசாலைகளிலிருந்து இடைவிலகியதாகப் புள்ளிவிபரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

இதேபோன்று, பாடசாலையை விட்டு விலகிய கிழக்கு மாகாண மாணவர்களின் எண்ணிக்கையானது இரண்டாவது இடத்தில் உள்ளது. 24,614 மாணவர்கள் 2011 இல் கிழக்கு மாகாணப் பாடசாலைகளிலிருந்து இடை விலகியுள்ளதாக கல்வி அமைச்சின் புள்ளி விபரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் இலவச கல்வி முறை நடைமுறையிலுள்ள போதிலும், இவ்வாறு பெரும் எண்ணிக்கையான மாணவர்கள் பாடசாலையிலிருந்து இடை விலகுவதானது அதிர்ச்சி தருவதாக, சிறுவர் பாதுகாப்பு நிறுவன அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

போரால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தொடர்ந்தும் நிலவும் வறுமை காரணமாகப் பாடசாலை மாணவர்கள் தமது கல்வியைப் பாதியில் நிறுத்துவதாக ஆய்வொன்றில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இவ்வாறு வறுமையில் வாடும் சிறார்கள், தொழிலுக்குச் செல்லவேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். அத்துடன், இவ்விரு மாகாணங்களிலும் போதியளவு ஆசிரியர்கள் காணப்படவில்லை. கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் இன்னமும் நிறைவு செய்யப்படவில்லை. இவ்வாறான காரணங்களால் மாணவர்கள் பாடசாலையிலிருந்து இடைவிலகுவதாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இவ்வாறான மாணவர் விலகலைத் தடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் போதிலும், தொடர்ந்தும் மாணவர்கள் இடை விலகும் நிலை அதிகரித்துச் செல்வதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

★ செவ்வியல் அல்லது தொல்சீர் ஆடல்கள் கிராமிய நடனங்களில் இருந்து முகிழ்ப்பும், கூர்ப்பும் அடைந்தவை. பரதநாட்டியம், கதகளி, குச்சிப்புடி, யக்சகானம், கதக், மணிப்புரி, ஒடிசி முதலியவை இந்தியாவின் தொல்சீர் ஆடல்களாகக் கொள்ளப்படுகின்றன. தமிழகத்தில் நிலவிய சின்னமேளம் அல்லது திருச் சதிராட்டத்துக்குப் பரதநாட்டியம் என்ற பெயரை அதனைச் சமஸ்கிருத மயப் படுத்தியோர் சூட்டினர். கேரளத்துப் பண்பாட்டில் கதை கூறும் ஆடல் கதகளி ஆகும். மோகினி ஆட்டமும்கேரளப்பண்பாட்டுடன் இணைந்தது. கதகளி மற்றும் பரத நாட்டியத்தின் இணைப்பை மோகினி ஆடலிலே காணலாம்.

குச்சிப்புடி ஆந்திரப் பண்பாட்டில் முகிழ்த்தது. இது பரதநாட்டியத்தின் அடிப்படைகளுடன் தொடர்புடையது. யக்சகானம் கர்னாடகப் பண்பாட்டிலே தோற்றம் பெற்றது. ஒரே நிலையில் காலடிகளை அதிவிரைவுடன் தட்டி ஆடும் தனித்துவத்தை கதக் கொண்டுள்ளது. வடஇந்தியப் பண்பாட்டிலே தோற்றம் பெற்ற ஆடல் வகைகளாக மணிப்புரியும் ஒடிசியும் அமைக்கின்றன. மணிப்புரி சமய உணர்வுகளை வெளிப்படுத்தும் கூட்டு ஆடல். ஒடிசி வழிப்பாட்டுடன் இணைந்த ஆடலாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோதனைகளை சாதனையாக்குவோம்

என்னாலே முடியுமென்ற நம்பிக்கை ஒன்றேதான்
என்னாளும் மக்களது இலட்சிய நன்மந்திரமாம்
பொன்னாலும் பொருளாலும் சாதிக்க முடியாததை
என்னாலே முடியுமென்ற எண்ணத்தால் வென்றிடலாம்!

மாற்றுவலு எல்லோர்க்கும் மறைபொருளாய் உண்டதனில்
ஊற்றுக்கண் மனமாகும் உறுதியுடன் முயற்சித்தால்
ஏற்றவர்கள் வழிகாட்டல் இருந்திட்டால் எப்போதும்
என்னாலே முடியுமென்ற எண்ணம் வந்து சேர்ந்திடுமே!

காலாலே பேனைபிடித்து கையில்லார் எழுதுவதும்
வாயாலே தூரிகையால் ஓவியங்கள் தீட்டுவதும்
காலில்லார் பொய்க்காலால் கருமங்கள் ஆற்றுவதும்
கண்ணில்லார் கல்வியிலே உயர்வதையும் காணீரே!

அங்கங்கள் குறைந்தாலும் நம்பிக்கை இருக்குமெனில்
இங்கவர்கள் கொண்டுலகு வியக்க வாழ்வார்
மின்னல் போல் உடலெங்கும் வியாபகமாய் வீறுகொண்டு
எண்ணியதை முடிக்கின்ற வலுவந்து சேர்ந்திடுமே!

மாற்றுவலு இல்லையென்று நினைத்திட்டால் அக்கணமே
சோதனைகள் வென்று நாம் சாதனைகள் படைத்திடுவோம்
நம்பிக்கையெனும் சக்தியுடன் இறுதிவரை செயற்பட்டால்
இங்கதுவே வாழ்வினில் முயற்சியால் உலகுதனை வென்றிடுவோம!

உன்னத தரணியிலே ஊனம் உற்றோர் யாருமில்லை
மனசு தானடா ஊனம் - அதை
மடக்கிப் பாராடா வாழ்வில் வெற்றி உண்டடா
தோழா! ஊனம் வாழ்வின் தடையல்லடா!

- செல்வி ர.சுகிர்தா
(தரம் II)
யா/இணுவில் இந்துக் கல்லூரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய தகவல் தொடர்பாடல் சாதனத்தின் முக்கியத்துவம்

கல்லைக் கல்லோடு உரசித் தீயைக் கண்டுபிடித்த மனிதன் பல்வேறு யுகங்களைக் கடந்து இன்று 21ஆம் நூற்றாண்டிலே காலடி எடுத்துவைத்துள்ளான்.

அன்றுமுதல் இன்றுவரை அவன் பல யுகங்களையும் கடந்து பல வெற்றிகளையும் கண்டுள்ளான். அவற்றுள் மகத்துவமான துறையே இந்தத் தகவல் தொடர்பாடல் துறையாகும்.

தகவல் தொடர்பு என்று கூறும் பொழுது ஒரு தகவலை ஒருவரிடம் இருந்து ஒரு தனி மனிதனுக்கோ அல்லது குழுவினருக்கோ பரிமாறிக்கொள்வதாகும்.

பண்டைய காலத்தில் தகவலை பரிமாறிக்கொண்ட முறையானது கூக்குரல் இடுவதன் மூலம், பறவைகள் மூலம் , கடிதங்கள் மூலம், தீ மூட்டுதல் மூலம் அமைந்தது

இவ்வாறான மிகவும் கஷ்டமான நிலைமையினால் தகவல் பரிமாற்றமானது அவர்களுக்குக் காலம் தாழ்த்திக் கிடைத்தல் மற்றும் உரியவரிடம் சென்றடையாமை போன்ற பிரச்சினைகளை எதிர்நோக்கினர். இவ்வாறு இருந்த தகவல் தொடர்பாடலானது இன்று மிகவும் வளர்ச்சி அடைந்து உலகளாவிய ரீதியில் உலகம் முழுவதும் பிரகாசித்துக் கொண்டு இருப்பதை நாம் காணக் கூடியதாக இருக்கின்றது.

இவற்றின் தொழிற்பாட்டை சொல்லுவோமானால் அது மிகையாகாது. அந்த வகையில் இன்றைய நவீன கால கட்டத்தில் கணினி, தொலைக்காட்சி, தொலைபேசி, இணையம், மின்னஞ்சல், தொலைநகல் போன்ற இவ்வாறான பல்வேறு தொழில்நுட்ப சாதனங்கள் நமது தேவையைச் செம்மையாக ஆற்றிவருகின்றன. தொலைபேசி மூலம் எமது உடனடித் தேவைகளை தொடர்பாடல் மூலம் பூர்த்தி செய் வது மட்டும் அல்லாது வெளிநாட்டு மற் றும் புதிய நண்பர்களுடன் தொடர்பாடல் செய்யவும் இது உதவுகின்றது. தொலைக் காட்சியை எடுத்து நோக்குவோமானால் நேரடி தொடர்பாடல், நேரடி ஒலி பரப்பு மூலம் நமக்கு உலகில் நடக்கும் பிரச்சினைகளையும் நமக்குத் தெரியாத இடங்களையும் பார்க்க இயல்கின்றது.

ஏன் எமது நாட்டின் கல்வி வளர்ச்சியினதும் பெரும் அதிபதி உத்தியாகக் காணப்படுவது கணினியாகும்.

பாடசாலைச் செயற்பாடுகளை வீட்டில் இருந்து கொண்டே ஆற்றமுடிகின்றது. இது கல்வி வளர்ச்சிக்கும் கணினி அறிவுக்கும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப்படுகின்றது.

இவ்வாறான தகவல் தொடர்பாடல் சாதனம் மூலம் சில தீமைகள் கூட கிடைக்கின்றன. அவையாவன - கணினிகளைத் தொடர்ந்து பாவிப்பதன் மூலம் கண்ணில் பல பிரச்சினைகளை எதிர்கொள்ளவேண்டியிருக்கும். மற்றும் தமக்கு இனந்தெரியாதவர்களுடன் தொடர்பாடல்களை வைத்திருத்தல். இதன் மூலம் பல பிரச்சினைகளை தாமே தேடிக்கொள்கின்றனர். இன்றைய உலகத்தில் எங்கு பார்த்தாலும் நவீன தொடர்பாடல் யுகமே ஒவ்வொரு இடத்தையும் தொட்டுத் தொட்டு பறந்த வண்ணம் உள்ளது. இவ்வாறான தகவல் தொடர்பாடல் சாதனமானது மழை போன்ற நன்மையைத் தந்தாலும் ஒரு மலை போன்ற தீமையையும் நமக்கு அளிக்கின்றது. இதனை அறிந்த நாம் அந்த சில தீமைகளை 'சீ' என உதறிவிட்டு சரியான முறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யில் பயன்படுத்துவதன் மூலம் பூரண அறிவைப் பெற்று நல்ல தொரு பிரஜையாக வாழ இயலும். விலங்குகளிடம் இருந்து பிரிதெடுக்கக்கூடிய பகுத்தறிவையுடைய நாம் தீமைகளை விட்டு நன்மைகளைத் தேடவேண்டும். நமக்கு நலன் விளைவிக்கும் வகையில் தகவல் தொடர்பாடல் சாதனைத்தைப் பயன்படுத்தி அதன் முக்கியத்துவத்திற்கு மதிப்பளித்து பயன்பெறுவோமாக.

**ப.லுக்ஷிகா**
(யா/இராமநாதன் கல்லூரி)

# இணுவை ஊருக்கு வளர்ந்து வரும் சமுதாயத்தின் பங்களிப்பு

இவ்வுலகில் ஆரம்பகால மனித இனமான வேடுவர் தமது தேவைகளை சூழலில் இருந்து பெற்றுக்கொண்டனர். இருந்தபோதிலும் சுற்றாடலில் ஏற்படும் மழை, மின்னல், புயல் என்பவற்றை கண்டு ஆச்சரியமும் அச்சமும் அவன் மனதில் எழுத்தது. தனது சுற்றாடலையும், தன்னையும் அது பாதித்துவிடக்கூடாது என எண்ணி அவற்றின் அருள்வேண்டியும் அவற்றைத் தெய்வமாகக் கருதி வழிபட்டான். அக்கால மனிதன் எவ்வாறு தனது சூழலை பாதுகாத்தானோ அதேபோன்று இக்கால் மனிதர்கள் தமது திறன்களை வெளிப்படுத்தியும் தமது ஆற்றல்களின் மூலமாகவும் தத்தமது ஊரிற்கு பெருமைகளைத் தேடித் தந்துகொண்டிருக்கிறார்கள்.

அந்த வகையில் எமது இணுவையும் தமது சமுதாயத்தினரது நல் ஆற்றல்கள் மூலமும் நற்பண்புகள் மூலமும் ஆன்மீக வளர்ச்சி மூலமாகவும் உயர்ச்சி அடைந்து வருகின்றது. இவ்வூர் இவ்வளவு உயர்ச்சி அடைந்திருக்கக் காரணம் இணுவை சமுதாயமும் அவர்களின் நற்செயல்களும் தான் என்று கூறுவதே இதற்கு ஒப்பானதாகும். மேலும் இந்த இணுவை ஊரில் கலை, கலாசாரம், சமயம் என்பவற்றை பேணிப் பாதுகாத்து அடுத்து வரும் தலைமுறைக்கு அதனை புகட்டுவதற்கு இவ்வூரில் எவ்வளவோ சைவபணிமனைகளும் சமய அமைப்புக்களும் தோன்றி தமது நோக்கங்களை, காரியங்களை நிறைவேற்றி இளம் சமுதாயத்தினரது நல்வாழ்விற்கு வழிவகுத்து வருகின்றன. இதுவும் இணுவையின் நல் வளர்சிக்கும் இளம் சமுதாயத்தினரது நல்வாழ்க்கைக்கும் காரணமாக அமைகிறது.

இன்று விஞ்ஞானமயமாகவே மாறிவரும் எமது உலகம் ஆன்மீகத்தைக் கடைப்பிடிக்காது உலக வாழ்விற்காக செல்வங்களை தேடுவதிலும் தமது தேவையினைப் பூர்த்தி செய்வதுமாக மட்டுமே இருந்து மனித வாழ்க்கையை அமைத்து வருகிறது. இதன் மூலம் பழமையும், கலாசாரங்களும் அழிந்துவிடும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றது. ஆனால் எமது கலாசாரங்களையும் பழமையையும் பேணி நற்பிரஜைகளை உலகிற்குத் தரும் ஓர் ஊராக உதாரணம் காட்ட எமது இணுவையூரே சிறந்தது எனலாம்.

மேலும் எமது இளம் சமுதாயத்தினர் தமது கலைகளையும் ஆற்றல்களையும் வெளிப்படுத்தி தேசிய மட்டங்களிலும் இன்னும் பல போட்டிகளிலும் தமது திறமையை வெளிப்படுத்தி முதலிடத்தை தட்டிச் சென்று தமக்கும் தமது ஊருக்கும் பெருமை தேடித் தந்து கொண்டு இருக்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பேச்சுப் போட்டி, நாட்டிய நாடகம், இசை நாடகம், நடனம், வில்லுப்பாட்டு போன்ற தேசிய மட்ட நிகழ்வுகளில் பங்குபற்றி தமது திறனை வெளிப்படுத்தி எம் இணுவை யூர் மைந்தர்கள் தமது ஊரிற்கு அழகு சேர்த்து பெருமையை தேடித்தந்திருக்கி றார்கள்.

மேலும் வளர்ந்து வரும் எமது இளம் சமுதாயத்தினர் இணுவை எனும் தங்க மகுடத்தினை அலங்கரித்து முத்துகளா கவும் வைரங்களாகவும் திகழ்கின்றனர். இவ்வாறு இந்த சமுதாயம் தன்னகத்தே ஆற்றல்களை மட்டும்கொண்டிருந்தால் இந்நிலைக்கு வந்திருக்கமுடியாது. இவர் களின் பெற்றோரது உந்துசக்தியும் இறை வனது அருட்கடாட்சமும் இவர்களுக்குக் கிட்டி இருப்பது இணுவையூர் செய்த தவப்பயன் ஆகும்.

இதேபோன்று இனிவரும் சமுதாயத் தினரும் தமது மரபு வழியைப் பின்பற்றி இணுவையின் பழமை, கலாசாரம் என்ப வற்றைப் பேணி, இணுவை எனும் மகு டத்திற்கு நற்பிரகாசத்தையும் பெருமையை யும் தேடித்தர வேண்டும் என இறைவனை பிரார்த்தித்து மேலும் இணுவை மைந்த னாக வாழ்ந்து இறை அருள் பெறுவோ மாக.

**ப.கௌரீசன்**
*தரம் 10*
கொக்குவில் இந்துக் கல்லூரி,
இணுவில் இளந்தொண்டர் சபை
மாணவன்.

# பனை மரம்



பனை மரமாம் பனைமரம்
பலன்கள் பலவும் தரும் மரம்
வான் நோக்கி வளர்திடுமாம்
யாழ். மண்ணை விளக்கிடுமாம்!

காலை மாலை ருசித்து மகிழ
பதமாய் பதநீர் நுங்கு தந்திடுமாம்
கன்னங் கரேலென்று கட்டியாக
கருப்பட்டி சிப்பம் அளித்திடுமாம்!

ஏழை எளியோர் வசித்திடவே
சட்டமும் விட்டமும் அளித்திடுமாம்!
பாட்டுத் தமிழ் ஏட்டில் நிலைத்திட
ஏடும் சுவடியும் தந்திடுமாம்!

கற்கண்டு, கிழங்கு, மிட்டாய், பெட்டி
ஒடியல், பனாட்டு, பனங்களி
பலன்கள் பல தருவதாலே
'கற்பகதரு' எனப் புகழ்பெற்றாய்!

**இ.வைஸ்ணவி,**
**7 C**
*யா/இணுவில் மத்திய கல்லூரி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உங்கள் விருந்து


## 'இணுவில் ஒலி' 2ஆம் இதழ் (கார்த்திகை – மார்கழி 2012)

இணுவில் ஒலியின் இரண்டாவது இதழ் வெளிவந்துள்ளது. இணுவில் மண்ணின் மைந்தர்கள் இணுவிலின் விழுமியங்கள் சம்பந்தமாகவும் சமுதாயத்தை விழிப்பு நிலைக்குக் கொண்டு வந்து, அதன் அறிவு – இலக்கியம் சார் தளங்களை மேலெழச் செய்யும் விசையைக் கொடுக்கும் ஆக்கங்களை இவ்விதழில் படைத்துள்ளனர். இணுவில் மண்ணின் மைந்தர்களால் இயக்கப்பட்டும் லண்டன் ஒன்றியம், புலம்பெயர் நாட்டில் எம்மக்கள் பங்களிப்பு, அறிவு விருத்திப் பணியில் பொதுநூலகம் ஆகிய ஆக்கங்கள் வெளிப்படுத்தும் தகவல்கள், ஏனைய ஊர் மக்களையும் சிந்திக்க வைப்பவை. ஆக்க இலக்கியத்தை ஆசிரியர் ஏன் மறந்தாரோ புரியவில்லை. நாடறிந்த ஆக்க இலக்கியப் படைப்பாளிகளை இணுவில் மண் புனைவிலக்கியத்துக்குத் தந்திருக்கின்றதல்லவா? எதிர்காலத்தில் இது கவனிக்கப்படுமென நம்புகிறோம்.

'தினக்குரல்'
*06.01.2013*

---

## மாற்றுச் சிந்தனைக்கு வழி செய்க!



'இணுவில் ஒலி' கார்த்திகை – மார்கழி 2012 இதழ் கண்டேன். பேனா முனையிலிருந்து..., ஆசிரியர் தலையங்கம் நன்று. பொதுவாக இன்றைய நாட்டின் நிலையை அது கூறுகின்றது. குறிப்பாக யாழ். நிலையைச் சுட்டிக்காட்டுகின்றது. போதை, மது பாவனை, புதிய சந்ததிகளின் வித்தியாசமாக போக்குகள் யாழ்.மண்ணின் நல்ல பாரம்பரியங்களையும் விழுமியங்களையும் பின்பற்றாமல் நழுவிச் செல்கின்ற நிலைமை, புதிய குடியேற்ற வாசிகளும் பாரம்பரிய கிராமிய சிந்தனையாளர்களிடையே காணப்பட்ட நில நல்ல அம்சங்களுக்கும் இடையேயான முரண்பாடுகள் இப்படிப்பல யாழின் அல்லது வடக்கு கிழக்கின் மண்ணில் நச்சு விதைகளாகி வருகின்றமை கண்டு உள்ளம் துன்புறுகிறோம்.

இந்தப் பின்னணியில் வெளிவரும் 'இணுவில் ஒலி' மாற்றுச் சிந்தனைக்கும் புதிய நல்ல பண்பாட்டு கோலங்களுக்கும் வழிவிடல்வேண்டும். மாறிவரும் புதிய நல்ல விடயங்கள் வரவேற்கப்பட வேண்டிவை ஆகும். இணுவில் ஒலியில் இவைகள் ஒலிக்கப்பட "களம்" அமைக்கப்படின் நலம்.

– மொழிவரதன் C.மகாலிங்கம
கொட்டகல.

---

## அறிவுத்தேடலின் உந்துசக்தி



இலங்கையில் வெளிவருகின்ற அநேகமான சஞ்சிகைகள் பிரபல்யமான எழுத்தாளர்களின் கட்டுரை, கவிதை, சிறுகதை போன்றவற்றுக்கு முக்கியத்துவம் கொடுத்து ஏதோ சாதனை படைத்துவிட்டதாகத் தமக்குத் தாமே புகழாரம் தேடிக்கொள்ளுகின்றன. ஆனால், 'இணுவில் ஒலி" மாணவச் செல்வங்களுக்கும் களம் அமைத்துக்கொடுத்து அவர்களை ஊக்குவிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளமை சிறப்பம்சமாகும். மேலும் குறுகிய நேரத்தில் வாசிக்கக் கூடிய பயன்தரும் பல்வகை அம்சங்களைத் தாங்கிவருவது வாசகர்களின் அறிவுத் தேடலுக்கும் உந்து சக்தியாக அமைகிறது எனலாம். 'இணுவில் ஒலி' தனது பணிணைச் சிறப்புடன் தொடர எனது வாழ்த்துக்கள்

– மா.ச.கனகரத்தினம்
மல்லாகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராமநாதன் கல்லூரி நூற்றாண்டு விழாவும் மரங்கள் நாட்டும் நிகழ்வும்









இணுவில் மருதனார் மடம் இராமநாதன் கல்லூரியின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, அதன் முதல் நிகழ்வாகக் கல்லூரியின் அதிபர் திருமதி கமலராணி கிருஷ்ணபிள்ளை அவர்களின் தலைமையில் கல்லூரி வளாகத்தில் மரங்கள் நாட்டும் வைபவம் நடைபெற்றது. பிரதம அதிதிகளாக லண்டன் சைவமுன்னேற்றக் கழகத்தின் ஸ்தாபகர் திரு. இரத்தினம் இராமநாதன் மற்றும் திருமதி இராமநாதன் ஆகியோரும், சிறப்பு அதிதிகளாகக் கல்லூரியின் பழைய மாணவிகளான யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட நூலகர் திருமதி ஸ்ரீகாந்தலக்சுமி சிவநேசன் மற்றும் டாக்டர் ஜயந்தி சேனாதிராசா அவர்களும் பங்குகொண்டு சிறப்பித்தார்கள். மேலும் கல்லூரியின் அபிவிருத்திச் சங்கத்தினர், பழைய மாணவர் சங்கத்தினர், பெற்றோர், நலன்விரும்பிகள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். நூற்றாண்டு விழாவில் நூறு பயன்தரு மரங்கள் நாட்டப்பட்டமை வரலாற்று நிகழ்வாகும். இந்த முக்கிய செயற்பாட்டுக்கு இணுவில் மைந்தன் நடராசா சச்சிதானந்தன் (லண்டன்) முழுமையான ஆதரவை நல்கியிருந்தமை விசேட அம்சமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை பயிற்சிக் களமாதல் வேண்டும்

**திரு.அ.சதானந்தன்**
அதிபர்,
யா/இணுவில் மத்திய கல்லூரி

கல்வியை வழங்குவதற்கு என ஒழுங்க மைக்கப்பட ஒரு நிறுவனமே பாடசாலை யாகும். பாடசாலை சமூகத்தின் உயிர் நாடி எனலாம். சமூகத்தில் சேர்ந்து, இணைந்து வாழ்வதற்கு ஏற்ற பயிற்சியை வழங்குவது பாடசாலையாகும். அன்னையின் மடியில் தவழ்ந்து விளையாடும் குழந்தை, தனது ஐந்தாவது வயது முடிவில் பாடசாலையில் சேர்க்கப்படுகின்றான். சமூகத்தில் உயர்ந்த வனாக, ஒழுக்கம் உடையவனாக, அறிஞ னாக, ஆளுமை பொருந்திய நல்ல தலை வனாக தன்பிள்ளை வளர வேண்டும் என்ற உயர்ந்த நோக்கில் குழந்தை பாடசாலை யில் சேர்க்கப்படுகின்றான். பாடசாலைச் சமூகத்தில் குழந்தை இணைக்கப்படுவ தானது, அக்குழந்தைக்குப் புதிய அனுபவ மாக அமைகின்றது. அக்குழந்தைக்கு இயல்பா கவே அமைந்துள்ள திறன்களை வெளிக் கொணர்ந்து, அறிவு விருத்தி பெறவும், நல்ல மனப்பாங்கை பெற்றுக் கொள்ளவும், பாடசாலைச் செயற்பாடுகள் பொருத்த முடையனவாக அமைதல் வேண்டும்.

அரசினால் உருவாக்கப்படும் கலைத் திட்டங்கள், பாடசாலையில் நடைமுறைப் படுத்தப்படுகின்றன. இக்கலைத்திட்டங் களை மாணவர்கள் பயன்பெறும் நோக் கில் நடைமுறைப்படுத்தும் பொருட்டு ஆசிரியர்கள் மற்றும் கல்விசாரா ஊழியர் கள் பாடசாலையில் நியமிக்கப்படுகின்ற னர். அத்துடன் முன்பயிற்சி, சேவைக் காலப்பயிற்சி, ஆசிரியப்பயிற்சி போன்ற பயிற்சிகள் பல்வேறு நிறுவனங்களால் வழங்கப்பட்டு வருகின்றன. இவர்கள் பெறும் பயிற்சி மூலம் தமது வாண்மையை விருத்தியடையச் செய்வதுடன் மாணவர் களும்பயன்பெற இயைபுபடுத்தல்வேண்டும்.

**வாழ்க்கையே கல்வியாக**

அமெரிக்க கல்வித் தத்துவஞானி "ஜோன்டூயி" கருத்துப்படி மாணவர்கள் தம் முன்னோர் பெற்ற அனுபவங்கள் வாயி லாக பெறுவதே கல்வி ஆகும். பாடசாலை யில் வழங்கும் கல்வி மாணவர்களது வாழ்க் கைக்கு உதவக்கூடிய அனுபவங்களைப் பெற உதவவேண்டும். வகுப்பறைகள் வேலைக்களங்களாகவும், பயிற்சிக்களங்க ளாகவும், அமைதல் வேண்டும் என்பது இவரது கருத்தாகும். கல்வி என்பது வாழ் வதற்கு தயார்படுத்தல் அல்ல; வாழ்வதே கல்வியாகும். எனவே எதிர்கால வாழ்க் கைக்கு மாணவர்களைத் தயார்படுத்துவ தன்றி பாடசாலையில் யாதேனும் விதத் தில் வாழ்வதற்கான சந்தர்ப்பத்தைப் பெற் றுக் கொடுத்தல் வேண்டும் என்பதையே கல்வி மூலம் அவர் எதிர்பார்க்கின்றார்.

பாடசாலையினுள்ளும் பாடசாலைக்கு வெளியேயும் பெறும் அனுபவங்களுக் கிடையில் ஒற்றுமை காணப்படல் வேண் டும். பாடசாலைப் பாடவிதானத்திற்கும் அனுபவ உலகத்திற்கும் இடையிலான பரஸ்பர தொடர்பு கட்டியெழுப்பப்படல் வேண்டுமென்பது டூயி கருத்தாகும். பாட சாலையின் அனுபவங்களை வாழ்க்கை அனுபவங்களுடன் தொடர்புபடுத்துவது அவசியமானதாகும். மாணவர்களை சமூக வாழ்க்கைக்கு தயார்படுத்தாத பாடசாலை களை கல்வி நிறுவனங்களாகக் கருத முடி யாது. பிள்ளைகளின் முதிர்ச்சிக்கு ஏற்ப திறன்கள், ஆசைகள், ஆர்வங்கள் வளர்ச்சி யடைகின்றன. இவ்வளர்ச்சிக்கு இயைய கற்றலையும், அனுபவங்களையும் தொழிற் பாடுகளையும் ஒழுங்கமைத்துக் கொள்ள வேண்டும் என டூயி பிரேரிக்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அனுபவமே கல்வியாக

ஒவ்வொரு பாடத்தையும் கற்பிப்பதற்குப் பதிலாக சமூகக் கருமங்களில் ஈடுபடுத்திக் கொள்வதற்கும் கூட்டுத் தொழிற்பாடுகள் மூலம் சமூகம் தொடர்பான அறிவைப் பெற்றுக்கொள்வதற்குமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். விஞ்ஞானம், விவசாயம், வாழ்க்கைத்திறன், மனையியல் ஆகிய செய்முறைப் பாடங்களுக்குக் கூடுதலான அளவு செய்முறையில் மாணவர்கள் ஈடுபட்டு அனுபவ வாயிலாக அறிவைப் பெற ஒழுங்கமைத்துக் கொள்ளுதல் வேண்டும். ஏனைய பாடங்களுக்கும் பொருத்தப்பாடான இடங்களில் செய்முறையில் ஈடுபட வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும்.

வர்த்தகப் பாடத்தில் கூட்டுறவு அமைப்புப்பற்றிய விடயத்தைக் கற்பிக்கும் முகமாக பாடசாலைக் கூட்டுறவுச் சங்கம் அமைத்தலும் அதன் கொள்கைகள், தத்துவங்கள் என்பவற்றை விளங்கிக் கொள்ளவும் அனுபவவாயிலாக அதன் அனுகூலங்களைக் கண்டு கொள்ளவும் வழியமைத்தல் வேண்டும். ஒருவருக்காகப் பலரும் பலருக்காக ஒருவரும் ஈடுபடவும் ஒற்றுமை, சமத்துவம், ஜனநாயக அடிப்படையினை அனுபவ வாழ்க்கையாக காண்பதற்கும் ஒழுங்கமைக்கப்படல் வேண்டும்.

### கல்விச் சுற்றுலா ஊடாக

சமூகக்கல்வி விஞ்ஞானம் போன்ற பாடங்கள் சூழல் அனுபவங்களை நேரடியாகப் பெறத்தக்க வகையில் ஒழுங்கு செய்தல் வேண்டும். கடற்கரை மலைப் பகுதிகளில் நீர்வீழ்ச்சிகள், இயற்கைத் தாவரங்கள், கடற்கரைத் தாவரங்கள், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் போன்றவற்றை நேரடியாக காண்பதன் மூலம் பெறும் அனுபவவாயிலாக அறிவு வளர்க்கப்படல் வேண்டும். ஆய்வு ரீதியாக மாணவர்கள் ஈடுபட வரலாற்று ஆசிரியர்கள் வழிகாட்டுதல் வேண்டும். இதன்பொருட்டு நன்கு திட்டமிடப்பட்ட வகையில் பொருத்தமான கால அட்டவணையைத் தயாரித்துக் கொள்ள வேண்டும்.

### தொழிற்சாலைகளைப் பார்வையிடுதல் மூலம்

வர்த்தகப் பாடத்தில் குடிசைக் கைத்தொழில் பற்றிய விடயத்தில் போதுமான விளக்கங்களைப் பெறவும் குடிசைக் கைத்தொழில் நடைபெறும் இடங்களிற் பயிற்சி பெறவும் மாணவர்கள் நேரடியாகப் பார்வையிடவும் அதன் மூலமாக சுய நம்பிக்கை கொள்ளவைக்கவும் ஒழுங்கமைத்துக் கொள்ளுதல் வேண்டும்.

இவ்வாறான வெளிப்புற வேலைத் திட்டங்களின் போது மாணவர்களை குழுக்களாக வகுத்து. அவர்களுக்கு வழங்கும் ஆலோசனைகள் மூலம் அவர்களே திட்டமிடவும் ஒழுங்கமைக்கவும் ஏற்ற முறையில் ஈடுபடவைத்தல் வேண்டும்.

தமிழ்மொழிப்பாடத்தில் கலை, இலக்கிய சஞ்சிகைகள் உருவாக்கப்பட மாணவர்கள் வழிப்படுததல் வேண்டும். ஆசிரியர்கள் வழிகாட்டிகளாக இருந்து மாணவர்களே ஆக்கங்களை வெளிக் கொணர்ந்து சமூகப் பயன்பாட்டிற்கு உதவச் செய்தல் வேண்டும். பல்வேறுபாடங்களுக்கும் இவ்வாறான பயிற்சி அவசியமானதாகும்.

### பொருட்காட்சிகள் ஊடாக

வகுப்பறையில்செவி வாயிலாகப்பெறும் அறிவு வாழ்க்கைக்கு உதவமாட்டாது. அதனை அனுபவ வாயிலாக செயற்படவைக்கின்றபோது உண்மையான கல்வி அறிவு ஏற்படவும் மாணவர்களின் சிந்தனை மேலும் தூண்டப்படவும் ஏதுவாகின்றது.

ஜோண்டூயி அவர்களது வாழ்ந்து கற்றல் என்பதற்குப் பொருத்தமான கல்விக் கொள்கை நாட்டிற்கு உகந்த முறையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்படல் வேண்டும். தற்போது வழக்கில் உள்ள கல்விக் கொள்கையானது கல்வி கற்கும் மாணவர்தொகையில் சிறு வீதத்தினர் மட்டும் உயர் கல்வி கற்பதற்கும் அதனூடாக உயர் கண்ணியத் தொழில் பெறவும் மற்றைய சிறுபகுதியினர் அரச நிறுவனங்களில் வேலை வாய்ப்பு பெறவும் உதவுகின்றது. பெரும்பாலோர் வாழ்க்கைக்கு உதவக் கூடிய தொழில் வாய்ப்பிற்குரிய பயிற்சி இல்லாது பாடசாலையில் இருந்து வெளியேறுகின்றனர். இதனால் வேலை வாய்ப்பு அற்றோர் தொகை அதிகரித்து வருகின்றது. நாட்டில் கைத்தொழில் மயமாக்கும் கொள்கையும் நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு மக்களின் தொழில் வாய்ப்புக்கும் உதவக்கூடியதாக அமைதல் வேண்டும். என்ற கருத்து பல வருடகாலமாகப் பொதுவாகப் பலராலும் பேசப்பட்டு வருகின்றது. பாடசாலையின் கலைத் திட்டப்பாடங்கள் அனைத்திற்கும் பொருட்காட்சி ஆண்டு தோறும் ஒழுங்கமைக்கப் படல் வேண்டும். கல்வியின் மூலம் பெற்ற அறிவும் பிரயோகம் வெளிக்கொணரப்பட மாணவர்களுக்கு நல்ல வாய்ப்பாக அமைகின்றது. வகுப்பறையில் மாணவர்கள் பெறும் குறிப்புக்கள், மதிப்பீடுகள் வாயிலாக அவர்கள் பெற்றுக் கொள்ளும் அறிவு என்பவற்றை விட அவ்வாறு பெற்ற அறிவினைச் செயன்முறையாக வெளிப்படுத்தவும் கண்காட்சி உதவும் எனலாம். அழகியல், உணர்வுகள் சிறப்பாக வெளிக்கொணரப்பட கண்காட்சி உதவும் எனலாம்.

**பரீட்சை மையக்கல்வி முறைமையிலிருந்து - தொழில் விருத்திக் கல்வி முறைமைக்கு...**

இன்றைய கல்வித்திட்டம் மாணவர்களுக்குப் பரீட்சையை மையமாகக் கொண்டு அமைவதாகப் பெரும்பாலானவர்களால் சுட்டிக்காட்டப்பட்டு வருகின்றது. கோவைகள் பேரேடுகள் பேணுவதிலும் அலுவலகத்தில் தூய சீருடை அணிந்து வேலை செய்யவும் பழக்கப்பட்டவர்களாக மாற்றும் வகையிலேயே கல்வித்திட்ட நடைமுறை காணப்படுகின்றது. இதனோடு பல்வேறு தொழில்களுக்கிடையே சம்பள ஏற்றத் தாழ்வு பெருமளவு காணப்படுகின்றது. மனித உழைப்பு சரியாக மதிப்பீடு செய்யப்படாத நிலையில் வருமான வேறுபாடு மக்களிடையே காணப்படுகின்றது. தொழில் திறன் விருத்தி ஏற்படுத்தும் பயிற்சிகள் திட்டமிடப்பட்ட அடிப்படையில் வழங்கப்படுதல் பயனுடையதாகும்.

21ஆம் நூற்றாண்டில் இதனை நடைமுறைக்கு கொண்டு வர அரசு விழைந்து நிற்கின்றது எனலாம். இதற்காக 21ம் நூற்றாண்டு கல்வித்துறையில் நவீன எண்ணக் கருக்களை புகுத்தவும் விஞ்ஞான நோக்குடையதாகவும் நவீன உருவாக்கங்கள் பெறவும் உயர்கல்விக்கொள்கை நன்கு திட்டமிடப்பட்டு வகுக்கப்பட வேண்டும். இவ்வாறு வகுக்கப்படும் கல்விக் கொள்கையின் அடிப்படையில் பாடசாலை செயற்பாடுகள் நடைமுறைக்கு கொண்டு வரப்படும் போது தற்போது வழங்கப் பட்டு வரும் கல்வி முறையில் பெறும் பயனிலும் கூடுதலான பயன்பெற வாய்ப்பு ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

**கணினித் தொழில்நுட்பக் கல்வி முறைமை ஊடாக**

இன்றைய உலகம் பல்வேறு மாற்றங்களுக்கு உட்பட்டு தகவல்களாக மாற்றமடைந்து வருகின்றது. இந்த எண்குறிக் காலத்தில் நாம் கல்வியில் பல்வேறு சவால்களை எதிர்நோக்கப்போகின்றோம். அறிவு சார் உலகத்திலே அறிவுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் போது அதன் பின்புலமாக கல்வியின் வளர்ச்சி முக்கியம் பெறுகின்றது.

உலக நாடுகள் 2015 இல் எல்லோருக்கும் கல்வி வசதி என்ற தூர நோக்கோடு செயற்பட்டு வருகின்றது. அதனை அடை

PUBLIC LIBRARY JAFFNA



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதற்கு சகல நாடுகளும் தந்திரோபாயங்களை முன்னெடுத்து வருகின்றன. இதன் விளைவாக 2012ம் ஆண்டு சிறுவர் தினத்தின் தொனிப்பொருளாக ஒவ்வொரு பிள்ளையும் பாடசாலையில் என்பது முன்வைக்கப்பட்டுள்ளது. எமது எதிர்காலம் கல்வி வளர்ச்சி அறிவின் தேட்டத்திலேயே தங்கியுள்ளது. என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். நவீன விஞ்ஞானத் தொழிநுட்ப முறையினால் ஏற்படும் சவால்களை எதிர் கொள்ள மாணவர்களிற்கான கல்வி வழங்கப்பட வேண்டும். கல்விமுறை பாடங்களில் ஏற்படும் மாற்றங்கள் கவனத்தில் கொள்ளப்படுதல் வேண்டும். கணினிப் பிரயோக வாழ்க்கைத் திறனில் ஆங்கில மொழி ஆகியவற்றின் முக்கியத்துவம் இன்று பலராலும் உணரப்பட்டு வருகின்றது. இந் நடைமுறைகளை அறிந்து தெளிந்து நன்கு பயிற்சி பெற்றவர்களாக ஆசிரியர்கள் தம்மை மாற்றிக் கொண்டும் அறிவுசார் தகவல்களை இளைப்படுத்திக் கொண்டவர்களாக தமது வாண்மையை உயர்த்திக் கொண்டு மாணவர்களுக்கு நல்ல வழிகாட்ட ஆசிரியர்கள் தம்மை தயார்படுத்திக் கொள்ள வேண்டும். சேவை, அர்ப்பணிப்பு, நேர்மை, உயர்நம்பிக்கை, நல்லொழுக்கம் என்பன ஆசிரியர்கள் கொண்டு இருத்தல் மிக இன்றியமையாததாகும். மாணவர்களைச் சிறப்பாக வழிநடத்த கூடியவர்களாகவும் இருத்தல் வேண்டும். சிறந்த புலமைத்துவம் உடைய வினைத்திறன் மிக்க ஆசிரியர்களாலேயே நல்ல சமூகத்தை உருவாக்க முடியும். கல்வியானது இன்று online வாயிலாக வழங்கப்பட்டு வருவதைக் காணமுடிகின்றது.

**உயிர்ப்புள்ள செயற்பாட்டுக் களமாக பாடசாலை**

பரீட்சை முறைகளிலும் மாற்றங்கள் ஏற்படக் கூடிய நிலமை உருவாகி வருகின்றது. தற்போது ஞாபக சக்தியில் பரீட்சை எழுதும் முறைகளிலும் மாற்றங்கள் ஏற்படக் கூடிய நிலமை எதிர்காலத்தில் உருவாகும். எனவே உடல் உள்ளம் சார்ந்த வகையில் முழுமையான கல்வி வழங்குவதற்கு ஆசிரியர்கள் தாம் பெறும் அனுபவத்தின் வாயிலாகவே மாணவர்களுக்கு கல்வி அனுபவம் வழங்க முடியும்.

மாணவர்கள் புதுமையான அணுகுமுறையிகளிலும் விமர்சன ரீதியான சிந்தனைகளிலும் ஈடுபட வாய்ப்புக்கள் வழங்கப்படல் வேண்டும். புத்தாக்கப்படைப்புக்கள் கல்வியின் உயர் வெளிப்பாடாகவே கொள்ளப்படுகின்றது. மாணவர்கள் நல்லொழுக்கம் ஜனநாயக ரீதியான பண்புகளை என்றும் பின்பற்றுபவர்களாக சமாதான வாழ்க்கை நெறிகளை விரும்புகின்றவர்களாக மாணவர்களை உருவாக்க வேண்டும். அறிவுத் திறன் பொருட்டு மாணவர்களை புத்திக் கூர்மையும், ஆன்மீகம், ஒழுக்க மேம்பாடு கொண்டு விருத்தி ஏற்படுத்தப்படல் வேண்டும்.

பாடசாலை எப்போதும் உயிர்ப்புள்ளதான செயற்பாடுகளுடையதாக ஒழுங்குபடுத்தப்படல் வேண்டும். பாடசாலைகள் பயிற்சிக்களங்களாக அமையும் போது விளைதிறன், வினைத்திறன் ஏற்பட்டு அதிக பயன்பெற வாய்ப்பு ஏற்படும்.

வாசகப் பெருமக்களே! மாணவச் செல்வங்களே!

நீங்கள் அறிந்த, தெரிந்த சிறு, சிறு விடயங்களைச் சுருக்கமாக எமக்கு அனுப்பிவைத்தால் அவற்றை அறிந்தவையும் தெரிந்தவையும் பகுதியில் வெளியிடுவோம். உண்மைகள் என்றும் மறைக்கப்படக்கூடாது. எனவே தவறாது எழுதுங்கள்.

**- ஆசிரியர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# TAPROBANE TRADING

**All Kinds of Engineering Tools, Bolts & Nuts,**
**General Hardware Merchants, Importers & Suppliers.**











## *Raju Baskaran*

*No 218, Messenger Street, Colombo 12.*
*Tel : +94(0) 11 2449425, 2386121, 2333076*
*Fax : + 94(0) 11 2386120*
*E-mail : tapro220@sltnet.lk*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# RAGU

## International (PVT) LTD

**Importers, Exporters & Commission Agents**

**101, Sri Kathiresan Street, Colombo-13.**
**Tel : 011-2438630 E-mail : raguint@sltnet.lk**



## SUBRAMANIAM AND SON

**IMPORTERS OF BEEDI LEAVES AND TOBACCO EXPORTERS**

**101/2, Sri Kathiresan Street, Colombo-13, SriLanka.**
**Tel : 011 - 2459531 Fax : 011 - 2459532**


சிவராம் பதிப்பகம், 20(32), கல்லூரி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 021 221 9440

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org